# ஸ்ரீ கீதாசார்யன்

காளயுக்தி ௵ கார்த்திகை ௴






தலைமை நீதிபதி அவர்கள் உரை.
மேடையில் அமர்ந்திருப்பவர்கள் : நா.பா., கமிஷ்னர், ஸ்வாமி, சாண்டில்யன்.

T. C. A. Venkatesan

# ஸ்ரீ கீதாசார்யன்




ஆசிரியர்

M. A. வேங்கடகிருஷ்ணன், M. A.

P. T. சுந்தர வரதன்
நிதிக் காப்பாளர்.

N. கணபதி
விளம்பரப் பொறுப்பாளர்.

7, தெற்கு மாட வீதி.
திருவல்லிக்கேணி : சென்னை-600005.

ஆண்டுச் சந்தா ரூ 8/ ]

[விலை 75 காசு

# பொருளடக்கம்


1. ஆசிரியர் பக்கம் 3

2. திருவரங்கத்தைப் பற்றி...
   'துருவன்'' 5

3. அவன் உகக்கும் ரஸம்
   சாண்டில்யன் 10

4. சீதாசார்யன் உதயம்
   புனர்வசு 12

5. பகவத் சீதாஸாரம்
   P. B. அண்ணங்கராசாரியர் ஸ்வாமி 17

6. திருவாய்மொழியும் த்வயமும்
   வேளுக்குடி வரதாசாரியர் ஸ்வாமி 21

7. தேவு மற்றறியேன்
   Dr. V. V. ராமாநுஜம் 25

8. வசனபூஷணத்தில் ஒருவாக்கு
   K. A. மணவாளன் 31

9. திருவரங்கம் பெரிய கோயில்
   ஸ்தலசயனத் துறைவர் ஸ்வாமி 33

10. திருமங்கை ஆழ்வார்
    M. A. வேங்கட கிருஷ்ணன் 38

11. கருத்து ஒற்றுமைகள்
    தீபம் நா. பார்த்தசாரதி. 42

12. ஐப்பசிமாத உத்ஸவ விவரங்கள் 45

13. பஞ்சாங்கம் 46

14. எமது உளம் கனிந்த நன்றி 47


15. ஆஸ்திகரே ! 48


---

மேலட்டையில்... ஸ்ரீரங்கம் ரங்கநாதன் (உத்ஸவர்)

ஶ்ரீ:

ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்



"कर्मण्येवाधिकारस्ते मा फलेषु कदाचन।"

தொகுதி 1 | காளயுக்தி௵ | கார்த்திகைமீ | நவம்பர் 78 | பகுதி 2

"ஆழ்வார் பாடலானாலும் குற்றம் குற்றமே"

— இது ஆலவாயன்.

"ஆழ்ந்து நோக்காது குற்றம் சாட்டுவது ஆலவாயனுக்கு அழகோ"

— இது பட்டர்.

விஷயம் இதுதான்.

திருமங்கையாழ்வார் புள்ளம் பூதங்குடி எனும் திவ்ய தேசத்தின் நீர்வளத்தை வர்ணிக்கும்போது "பள்ளச் செறுவில் கயலுகள பழனக்கழனி அதனுள் போய் புள்ளுப் பிள்ளைக்கிரை தேடும் புள்ளம் பூதங்குடிதானே" என்கிறார்.

அதாவது புள்ளம்பூதங்குடியிலுள்ள கழனிகளில் நீர் மிகுதியாக இருந்தது. அதில் (கயல்) மீன்கள் துள்ளி விளையாடிக் கொண்டிருந்தன. கரையிலுள்ள பறவைகள் தங்கள் குட்டிகளுக்கு இரையாக அக்கழனிகளில் மீன்களைத் தேடிக் கொண்டிருந்தன - என்பதாம். இதை பட்டர் விளக்கமாக அருளிச் செய்து கொண்டிருந்தார்.

அப்போது அந்த காலக்ஷேபத்தைக் கேட்டுக் கொண்டிருந்த ஆலவாயன் என்பவன் ஒரு சந்தேகத்தை எழுப்பினான்.

"செறுவில் கயல், உகள" என்று கூறியபோதே கழனியில் மீன்கள் அளவற்றுக் கிடக்கின்றன என்பது தெரிகிறது.

அப்படியிருக்க "இரைதேடும்" என்று ஆழ்வார் அருளிச்செய்ய வேண்டிய அவசியம் என்ன? கழனிகளில் மீன்கள் குறைவாக இருந்தால் அன்றோ தேடவேண்டும்; அவ்வூரின் நீர்வளத்தால் கழனிகளில் மீன்கள் துள்ளித்திரியும் போது தேடவேண்டிய அவசியம் என்ன?—இது ஆலவாயனுடைய கேள்வி.

அதற்கு பட்டர் அருளிச் செய்த பதில்: "ஆலவாயா! நீ நன்றாகக் கற்றவனாயினும் பாசுரத்திலுள்ள சொற்களின் போக்கை அறியவில்லை. கழனிகளிலுள்ள நீரின் மிகுதியால் அங்குள்ள மீன்கள் தூணும் துலாமும் போலே தடித்திருக்கும்; மிகவும் பெரியதாயிருக்கும். பறவைகள் "பிள்ளைக்கிரைதேடும்" என்றல்லவோ ஆழ்வார் அருளிச் செய்துள்ளார்! அப்பெரிய மீன்கள் குட்டிகளின் வாயில் நுழையாது. எனவே தங்களுடைய குட்டிகளின் வாயில் நுழையக் கூடிய சிறிய மீன்களைத் தேடுகின்றன. நீர்வளத்தின் மிகுதியால் மீன்களனைத்தும் பெருத்திருந்தபடியால் சிறிய மீன்களை தேடிப் பிடிக்கும்படியாகவே இருக்கிறது"

எவ்வளவு பெரிய விஷயத்தை பட்டர் எவ்வளவு எளிதாக தெளிவாகச் சொல்லி விட்டார்.

வேதங்கள், சாஸ்த்ரங்கள் முதலியவற்றில் எவ்வளவு பெரிய அர்த்தங்கள் தெரிவிக்கப்படுகின்றன! அவைகள் நமது புத்தியில் நுழைவது மிகவும் கடினம் அல்லவா! பறவைகள் போன்ற நம் ஆசாரியர்கள் அவர்களுடைய குட்டிகள் போன்ற நம்முடைய புத்திக்கும் எட்டக்கூடிய அர்த்தங்களைத் தேடிப் பிடித்து நமக்குத் தருகின்றனர், நம்முடைய நலனுக்காக.

நமது பத்ரிகையின் கடமையும் அதுவே. பறவை போல் காத்திருந்து மிகப் பெரிய விஷயங்களுக்குள்ளே எளிதானவற்றை தேடிப்பிடித்து, அவற்றை அனைவரும் எளிதாக, தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும்படி செய்வதே நமது குறிக்கோள்.

அதைச் செவ்வனே நடத்தக் கூடிய சக்தியை நமக்குத் தருமாறு கீதாசார்யனான ஸ்ரீ பார்த்தஸாரதி யெம்பெருமானை வேண்டுகிறோம்.

# திருவரங்கத்தைப் பற்றி...

"துருவன்"

● திரு அரங்கம். எம்பெருமான் எழுந்தருளியிருக்கும் இடம் என்ற பொருள் உடையது. ஸ்ரீ வைஷ்ணவர்கள் இந்த திவ்ய தேசத்தை கோயில் என்றே அழைப்பர்.

● ஸ்ரீ வைஷ்ணவர்களால் "பூலோக வைகுண்டம்" என்று கொண்டாடப்படும் ஸ்ரீரங்கம் தமிழகத்தில் திருச்சி ரயில்வே ஸ்டேஷனிலிருந்து (பஸ் நிலையத்திலிருந்தும்) இரண்டு மைல் தூரத்தில் உள்ளது

● சங்க இலக்கியங்களில் பாடப் பெற்றிருப்பதனாலும் சேர, சோழ, பாண்டியர்களும், விஜய நகர நாயக்க மன்னர்களும் இத்தலத்தே பல பல கைங்கர்யங்களை செய்துள்ளதாக பல கல் வெட்டுக்கள் காண்கின்ற படியாலும் இக்கோயில் கி. பி. முதல் மூன்று நூற்றாண்டுகளுக்கும் முற்பட்டது என்பது சரித்திரவாசிரி யர்கள் கருத்து.

● எல்லா திவ்ய தேசங்களுக்கும் வேர்ப்பற்று திருவரங் கமே. 'தென்னாடும் வடநாடும் தொழ நின்ற திருவரங்கம்" என்றார் பெரியாழ்வாரும்

● ஆழ்வார்கள் பதின்மரும் ஆண்டாளும் பாடிய ஏற்றம் பெற்ற தலம் இஃதொன்றே.

● 'மேல் வீடு" என்றும் "போக மண்டபம்" என்றும் கொண்டாடப்படும் இத்திருவரங்கத்து எம்பெருமான் திருவடி களிலே ஆண்டாளும், திருப்பாணாழ்வாரும் மறைந்த பெருமையை உடையது.

● ஸ்ரீராமபிரானுக்குப் பட்டாபிஷேகம் ஆனவுடன் ஒவ் வொருவருக்கும் ஒவ்வொரு பரிசளித்தான். ஸ்ரீ விபீஷணாழ் வானுக்கு தான் ஆராதித்து வந்த எம்பெருமானையே பரிசாக அளித்தான். அவனும் அவ்வெம்பெருமானை எழுந்தருளப்

பண்ணிக் கொண்டு இலங்கைக்குப் போகும் வழியில்,—ஸ்ரீரங்கத்தில், இரண்டு காவேரி மத்யத்தில் ரம்யமான சூழ்நிலையைக் கண்டு அங்கேயே எழுந்தருளியிருக்க விருப்பம் கொண்டு விபீஷணனுக்குத் தெரிவிக்க அவனும் அதற்கு சம்மதித்து அவரை அங்கேயே விட்டுச் சென்றனன் என்பது ஐதிஹ்யம்.

● அதனால்தான் அரங்கநாதன் தெற்கு நோக்கிப் பள்ளி கொண்டிருக்கிறான். "மன்னுடைய விபீடணற்காய் மதிளிலங்கைத் திசை நோக்கி மலர் கண் வைத்த என்னுடைய திருவரங்கர்" என்றார் பெரியாழ்வாரும்.

● மூலமூர்த்தி ஸ்ரீரங்கநாதன் என்றும் பெரிய பெருமாள் என்றும் குறிப்பிடப்படுகிறார். சயன திருக்கோலம். "குடதிசை முடியை வைத்து குணதிசை பாதம் நீட்டி வடதிசை பின்பு காட்டி தென்திசை இலங்கை நோக்கி..." என்பர் தொண்டரடிப் பொடியாழ்வார்.

● உத்ஸவர் நம்பெருமாள் என்றும் அழகிய மணவாளன் என்றும் குறிப்பிடப்படுகிறார். மூலவர் இரண்டு புஜங்களுடனும் உத்ஸவர் நான்கு புஜங்களுடனும் எழுந்தருளியிருக்கிறார்.

● இது பற்றி வேடிக்கையாக ஒரு ஐதிஹ்யமுண்டு. ஒரு சமயம், பரமபதத்தில் எழுந்தருளியிருக்கும் பகவானுக்கு இரண்டு கைகளா நான்கு கைகளா என்ற சந்தேகம் சிலருக்கு வந்ததாம். அவர்கள் பட்டரைக் கேட்க அவர் "அதனாலென்ன? இரண்டு கைகள் உடையவனாயிருந்தால் பெரிய பெருமாள் என்று நினையுங்கள்; நான்கு கைகள் உடையவனாய் இருந்தால் நம்பெருமாள் என்று கொள்ளுங்கள்" என்றாராம்.

● ப்ரணவாகார விமானத்தினடியில் எழுந்தருளியிருக்கும் எம்பெருமானைச் சுற்றி ஏழு மதில்களும் — திருவீதிகளும் உள்ளன. "மாடமாளிகை சூழ் திருவீதியும் மன்னுசேர் திருவிக்கிரமன் வீதியும், குலவிராச மகேந்திரன் வீதியும், ஆலிநாடன் அமர்ந்துறை வீதியும், கூடல்வாழ் குலசேகரன் வீதியும், தேடரிய தர்மவர்மாவின் வீதியும் தென்னரங்கன் திருவாரணமே"

என்று ஏழு ப்ராகாரங்களைத் தாண்டி உள்ளே செல்வோமானால் இரண்டு திருமணத் தூண்களுக்கிடையில் ஸ்ரீரங்கநாதன் எழுந்தருளியிருக்கிறான்.

● பலவாண்டுகள் உத்ஸவமூர்த்தி கோயிலிலே இருக்க முடியாமல் பல பல உபத்ரவங்கள் ஏற்பட்டன. வெளியிடங்கள் பலவற்றில் தங்கி, பலவாண்டுகள் கழித்து உத்ஸவமூர்த்தி பழைய படியே கோயிலுக்கு எழுந்தருளினார். இவர்தான் ஸ்ரீரங்கநாதன் என்று அறுதியிட அங்கே யாரும் இல்லை. பெரியோர்கள் பலர் பரமபதித்து விட்டனர். அப்போது ஓர் ஸ்ரீவைஷ்ணவ வண்ணான் உத்ஸவ மூர்த்தியை திருமஞ்சனமாட்டி, அவர் ஈரவாடைத் தீர்த்தத்தை உட்கொண்டு ''நம் பெருமாள்'' என்று அழைத்தான். அதுவே இவருக்கு நிலைநின்ற பேராயிற்று.

● எத்தலத்து அவதரித்த ஆசார்யரும் இத்தலத்தே வாழ்ந்திருந்து ஸ்ரீவைஷ்ணவ சமயத்தை நிர்வஹித்தது சரித்திரப்ரஸித்தம். ஸ்ரீமந் நாதமுனிகள், ஆளவந்தார், ராமாநுசர், நம்பிள்ளை, பிள்ளை லோகாசாரியார், மணவாளமாமுனிகள் ஆகிய அனைவரும் நம் தர்சன நிர்வாஹம் பண்ணியது இத்தலத்தே.

● கோயிலினுள் ஸூர்ய புஷ்கரிணி என்றும் சந்த்ர புஷ்கரிணி என்றும் இரண்டு புஷ்கரிணிகள் உள்ளன. சந்திர புஷ்கரிணிக் கரையில் ஸ்தல வ்ருக்ஷமான புன்னை மரம் ஒன்று உள்ளது. இதனடியில் நம் முன்னோர்கள் திருவாய்மொழி பாடி, வ்யாக்யானங்களை ஆராய்ந்தனுபவிப்பார்கள் என்பது ப்ரஸித்தம்.

● நம்பெருமாளும் தனிக்கோயில் நாச்சியாரான ஸ்ரீரங்க நாச்சியாரும் திவ்ய தம்பதிகளாய் பங்குனி உத்தரநாளில் சேர்ந்த சேர்த்தியில் ஸ்வாமி எம்பெருமானார் நமக்காக சரணாகதி செய்தது இத்தலத்தே.

● ஜகதாசார்யரான ஸ்வாமி எம்பெருமானாரை மிகவும் உகந்து பெருமாள் அவர் தூய பூத உடலை கோயிலுக்குள்ளேயே வஸந்த மண்டபத்திலே திருப்பள்ளிப்படுத்தி எழுந்தருளியிருக்கச் செய்தான். இவ்விடமே உடையவர் ஸந்நிதியாகும். இங்குள்ள எம்பெருமானார் திருமேனி ''தானான திருமேனி'' எனப்படுகிறது.

● நம்பெருமாளுக்கு மணவாள மாமுனிகள் ஆசார்யனுயிருந்து ஓராண்டு பகவத் விஷய (திருவாய் மொழி) காலக்ஷேபம் பண்ணியதும், சாற்றுமுறை தினத்தன்று நம்பெருமாளே 'ஸ்ரீசைல தயாபாத்ரம்' என்கிற தனியனை தன்னுடைய ஆசார்யனுக்கு ஸமர்ப்பித்ததும், அதற்காக இன்றைக்கும் ஸ்ரீசைலேச வைபவ உத்ஸவம் மாமுனிகள் ஸன்னிதியில் நடைபெறுவதும் இத்தலத்து விசேஷம்.

● நம் பெருமாள் தன் ஆசார்யரான மணவாள மாமுனிகள் பரமபதித்த தினமான மாசி மாதம் கிருஷ்ண பக்ஷ த்வாதிசியில் இன்றைக்கும் திருவத்யயனம் நடத்திவைப்பது இத்தலத்தே பரம விசேஷமாகும்.

● உத்ஸவங்கள்: தை மாதம் பூபதித் திருநாள்-பெருமாள் நாச்சியார் இருவருடன் திருத்தேர் உத்ஸவம் கண்டருள்வது இவ்வுத்ஸவம் 9ம் நாளன்று. இது ஸ்ரீராமன் நடத்தி வைத்த உத்ஸவம். பங்குனி மாதம் ஆதிப்ரஹ்மோத்ஸவம் இவ்வுத்ஸவத்தில் 9ம் நாள் ஸ்ரீரங்க நாச்சியாருடன் ஒரே சிம்மாசனத்தில் திருமஞ்சன உத்ஸவம் கண்டருள்வது விசேஷம். இவ்வுத்ஸவம் பிரமன் நடத்தி வைத்த உத்ஸவம். சித்திரை மாதம் விருப்பன் உடையார் நடத்தி வைத்த விருப்பன் திருநாள். ஆக தை, பங்குனி, சித்திரை உத்ஸவங்களில் த்வஜாரோஹண ரதோத்ஸவங்கள் உள்ளன. இக் கோயில் பாஞ்சராத்ரம்.

● நம்மாழ்வார் தொடக்கமான ஆழ்வார்கள் அருளிய செந்தமிழ் மறையாம் அருளிச் செயல்களைக் கேட்டு ஆனந்திப்பதற்காகவே ப்ரதி வருஷமும் கார்த்தி-மார்கழி மாதங்களில் திருமொழித்திருநாள் திருவாய்மொழித்திருநாள், என்று திருவத்யயனோத்ஸவம் கண்டருள்வது இத்தலத்தே பிரஸித்தம்.

● ஆழ்வார் திருநகரி நம்மாழ்வார் ப்ரதிவருஷம் அத்யயனோத்ஸவத்துக்கு ஸ்ரீரங்கம் எழுந்தருளி உத்ஸவம் முடிந்த பிறகு ஆழ்வார்—திருநகரி எழுந்தருள்வது நடந்த கதையாகும். பிற்காலத்தில் ஏற்பட்ட முஸ்லீம்களின் படையெடுப்பு, ஆற்காட்டுப் போர்கள் ஆகிய கலாபங்களினால் இது நின்றுவிட்டது.

● இப்போதும் அத்யயனோத்ஸவத்தில் நடைபெறும் அரையர் ஸேவையும், அரையர் அபிநயமும் வ்யாக்யானமும் கண்ணுக்கும் காதுக்கும் பெரு விருந்தாகும்.

● இத்தலத்தில் லோகப்ரபலமான உத்ஸவம் வைகுண்ட ஏகாதசியாகும். அன்றைக்கு லக்ஷக்கணக்கான மக்கள்திரள் எம்பெருமானைத் தரிசிக்க அலைமோதுவதை இன்றைக்கும் ஸ்ரீரங்கத்தில் காணலாம். அன்றைய தினம் பெரிய பெருமாளுக்கு முத்தங்கியும் நம்பெருமாளுக்கு வஜ்ராங்கியும் சாத்தப்படுகிறது. அந்த ஸேவையை கண்ணுரக் காண்பவர்கள் ''ஆபரணத்துக்கு அழகு செய்யும் பெருமான்'' என்ற விருது ஸ்ரீரங்கநாதனுக்கே தகும் என்பர்.

● கோயில் — பெரிய கோயில்; பெருமான் பெரிய பெருமாள்; பிராட்டி—பெரிய பிராட்டியார்; பெண் கொடுத்த ஆழ்வார — பெரியாழ்வார்; மண்டபம் — பெரிய திருமண்டபம் ; திருநாள் — பெரிய திருநாள்; பெரிய திருப்பாவாடை; ஆசார்யராம் ஜீயர் — பெரிய ஜீயர்; இப்படிப்பட்ட பெரிய பெரிய பெருமைகள் பெற்றது இத்தலம்.

● கவிச்சக்ரவர்த்தி கம்பர் தம் இராமாயண காவியத்தை அரங்கேற்றியது இத்தலத்தே தாயார் ஸன்னிதிக்கு எதிரேயுள்ள மண்டபத்திலாகும்.

● எத்தலத்தில் வாழும் ஸ்ரீவைஷ்ணவனும் ''ஸ்ரீரங்கச்ரியம் அநுபத்ரவாம் அநுதிநம் ஸம்வர்த்தய'' (ஸ்ரீரங்கத்தின் செல்வமானது உபத்ரவமில்லாமல் ஒவ்வொரு நாளும் வளரட்டும்) என்றும் ''அடியார்கள் வாழ அரங்க நகர் வாழ'' என்றும் திருவரங்கத்துக் பல்லாண்டு பாடுவது கொண்டே இத்தலத்தின் பெருமை அறியலாம். நாமும் அவ்வாறே வாழ்த்துவோம்.

# அவன் உகக்கும் ரஸம்

## சாண்டில்யன்

ஸ்ரீரங்கநாதன் சந்நிதிக்குச் செல்லும் படிகளொன்றில் உட்கார்ந்த வண்ணம் வயதான அரையர் ஒருவர் திருவாய் மொழிப் பாசுரங்களை மெல்லிய குரலில் இசைத்துக் கொண்டிருந்தார். அவர் கண்களிரண்டும் பார்வை இழந்து கிடந்தன. எத்தனையோ நல்லவர். இருப்பினும் சதா வெற்றிலே பாக்குப் போடும் ஒரு பழக்கம் மட்டும் அவருக்கு இருந்ததால் மடியில் ஒரு வெற்றிலைச் செல்லமும் கிடந்தது. அந்த வெற்றிலைப் பெட்டியில் வெற்றிலைப் பாக்குடன் ஒரு ஸாளக்கிராமத்தையும் வைத்திருந்தார் அரையர். பாக்கைத் தேடி பெட்டியைத் தடவினர் ஒரு முறை. ஸாளக்கிராமம் கிடைத்தது. அதைப் பாக்கென்று நினைத்து வாயில் போட்டுக் கடித்துப் பார்த்தார். ஸாளக்கிராமம் என்று தெரிந்ததும் அதை வாயிலிருந்து எடுத்து மேல் வேஷ்டியில் துடைத்து மீண்டும் பெட்டியில் போட்டு விட்டார். பிறகு பாக்கொன்றை எடுத்து வாயில் போட்டு வெற்றிலையையும் சுண்ணம் தடவி கிழித்து மென்று சுவைக்கலானர்.

இது நடப்பது முதல் தடவையல்ல. தினம் பலமுறை நடந்த விபரீதந்தான். இதை ஒரு மிக வைதிக வைஷ்ணவர் நீண்ட நாளாகப் பார்த்துக் கொண்டிருந்தார். அரையர் ஸாளக் கிராமத்துக்கு இழைக்கும் அநாசாரத்தையும் அபசாரத்தையும் அவரால் பொறுக்க முடியவில்லை. ஆகவே ஒரு நாள் "ஸ்வாமி! தினம் பெருமாளை வாயில் போட்டு எச்சில் பண்ணுகிறீரே. இது நியாயமா?" என்று கேட்டார்.

"கண் தெரியவில்லை" என்றார் அரையர்.

"அப்படியானல் பெருமாளை என்னிடம் கொடுமே. நான் ஆசாரமாக வைத்து ஆராதனம் செய்கிறேன்" என்றார் வைதிகர்.

"தாராளமாக எடுத்துப் போம்" என்று ஸாளக்கிராமத்தை எடுத்து அந்த வைதிகரிடம் கொடுத்து விட்டார் அரையர்.

அன்று அந்த வைஷ்ணவப் பிராம்மணர் வீட்டில் ஏக தடபுடல். ஸாளக்கிராமத்தை அவர் தனது கோவிலாழ்வாரில் எழுந்தருளப் பண்ணினார். திருமஞ்சனம் கண்டருளப் பண்ணி, புளியோதரை, தத்தியோதனம் முதலிய பிரசாதங்களையெல்லாம் அமுது செய்வித்தார். சேவை, சாற்றுமுறைக்கு வேறு இரண்டு மூன்று ஸ்வாமிகளையும் எழுந்தருளப் பண்ணி அதையும் விமர்சையாகச் செய்து முடித்தார். அன்று நிம்மதியாகப் படுத்தார் அந்த வைதிகர்.

அவர் நல்ல துயில் கொண்டதும் பெருமாள் அவர் சொப்பனத்தில் வந்து "நீ எதற்காக என்னை அரையர் வெற்றிலைப் பெட்டியிலிருந்து எடுத்து வந்தாய்?" என்று கேட்டார் கோபத்துடன்.

"ஸ்வாமி! அங்கு உமக்கு அபசாரம் நடக்கிறது. அதனால் எடுத்து வந்தேன்" என்றார் அந்த ஸ்வாமி.

"என்ன அபசாரம்?" என்று பெருமாள் கருவினார்.

"தேவரீரை தினம் பத்துத் தடவையாவது எச்சில் செய்கிறார் அரையர்" என்று சொன்னார் அந்த ஸ்வாமி.

"அட பைத்தியக்காரா! அது திருவாய்மொழி சொல்லும் வாயடா. தினம் அந்த ரஸத்தை சிறிது நேரமாவது நான் அனுபவிக்கிறேன். அதிலிருந்து என்னைப் பிரித்து இந்த மரப் பெட்டியில் ஏன் அடைத்து வைத்திருக்கிறாய்? உடனே கொண்டுபோய் அரையர் பெட்டியில் என்னை சேர்த்து விடு" என்றார் பெருமாள்.

சொப்பனத்திலிருந்து விழித்து எழுந்து உட்கார்ந்தார் வைதிகர். பகவான் திருவுள்ளத்தை நினைந்து நினைந்து உருகினார். "திருவாய்மொழி அனுசந்திக்கும் நாவே நாவு, அதில் ஊறும் நீரே அமுதம். அதுவே அவன் உகக்கும் ரஸம்" என்று சொல்லிக் கொண்டார்.

மறுநாளே பெருமாள் பழையபடி வெற்றிலைப் பெட்டிக்குள் பாக்குடன் கலந்து கிடந்தார். அரையர் கையும் ஒருமுறை பாக்கைத் தேடி பாக்குக்குப் பதில் ஸாளக்கிராமத்தை வாயில் போட்டு மீண்டும் எடுத்து துணியில் துடைத்து பெட்டியில் சேர்த்தது. வாய் திருவாய்மொழியை மெல்ல இசைத்தது.

# "கீதாசார்யன்" உதயம்

விழா விளக்கம்!

"புனர்வசு"

இளைஞர்களால் ஆகாத காரியங்கள் எதுவும் இல்லை என லாம். அதிலும் படித்த, பண்பட்ட, தெய்வ பக்தி நிறைந்த இளைஞர்கள் எந்தக் காரியத்தையும், தைரியமாக, அதே சமயம் விமரிசையாகவும் செய்ய இயலும் என்பதற்குச் சென்ற 11—10—78 அன்று திருவல்லிக்கேணி ஸ்ரீ பார்த்தசாரதி கோயிலில் நடைபெற்ற கீதாசார்யன் எனும் மாதப் பத்திரிகை வெளியீட்டு விழா ஒரு சிறந்த சான்று.

துடி துடிப்பான இளைஞர் ஸ்ரீ M. A. வெங்கடகிருஷ்ணனை ஆசிரியராகக் கொண்டு, ஆரம்பிக்கப்படும் பத்திரிகையில் அவரு டைய சகல காரியங்களுக்கும் உறுதுணையாக இருக்கும் இளை ஞர் ஸ்ரீ. P. T. சுந்தர வரதன் (நிதிக் காப்பாளர்) ஸ்ரீ N. கணபதி (விளம்பரப் பொறுப்பாளர்), இன்னும் பல ரும் உண்டு.

விஜய தசமியன்று கீதாசார்யன் என்ற மாதப் பத்திரிகை வெளியீட்டு விழா அதி அற்புதமாக, கோலாகலமாக நடை பெற்றது. உயர்ந்த மலரைக் கொண்டு ஆண்டவனை அர்ச்சனை செய்ய வேண்டும். அது போன்று அந்தந்த துறையில் உயர்ந்த பீடத்திலும், பதவியிலும் இருக்கும் பலரை, இந்த இளைஞர் கள் இம்மலர் வெளியீட்டு வைபவத்திற்கு அழைத்து வந்து தங் கள் காரியத்தை சாதித்துக் கொண்டது மிகவும் வியக்கத் தக்கது.

இளைஞர்கள் தானே என்று அசட்டை செய்யாது, அவர் கள் எடுத்துக் கொண்ட மிகப் புனிதமான பணியை மனதிற் கொண்டு, அவ் விளைஞர்களை ஊக்குவிக்க விரும்பி அத்தனை பேரும் விழாவிற்கு வந்திருந்து கௌரவித்தது மிகவும் போற் றத் தக்கது.

திருவாய்மொழி மண்டபத்தின் நடுவில் பார்த்தன் அர்ஜுனனுக்கு கீதோபதேசம் செய்யும் வகையில் இருந்த பிரம்மாண்டமான படம் புத்தக வெளியீட்டிற்கு மிகவும் பொருத்தமாக அமைந்திருந்தது.

கண்ணன் மீது இறை வணக்கம் பாடிய திரு P. K. ரகு ராமன் அதி அற்புதமாகப் பாடிப் பாராட்டுதலைப் பெற்றது குறிப்பிடத்தக்கது. கீதாசார்யனின் விளம்பரப் பொறுப்பாளர் திரு N. கணபதி அவர்கள் அனைவருக்கும் மாலை அணிவிக்க விழா மங்களகரமாகத் துவங்கியது.

பிறகு "கீதாசார்யன்" ஆசிரியர் திரு. M. A வெங்கட கிருஷ்ணன் தனக்கே உரித்தான புன்முறுவலுடன் ஆனந்தபரமாக எல்லோரையும் கவரும் வண்ணம் தன் வரவேற்புரையை வழங்கினார். ஆரம்பத்திலேயே அவருடைய பேச்சில் சூடு கிளம்பியது. வந்திருந்த அனைவரும் அவருடைய பேச்சை மிக உன்னிப்பாக கவனிக்க ஆரம்பித்தனர்.

## திரு. M. A. வெங்கட கிருஷ்ணன்.

"இந்தக் காலத்தில் ஆஸ்திகம் குறைந்திருக்கிறதா. அல்லது அதிகரித்திருக்கிறதா, என்று கேட்டால் பதில் சொல்வது கடினம். இப்படிப் பட்ட ஸந்தேக நிலையில் ஆரம்பிக்கப்படும் இப் பத்ரிகையின் நோக்கம் Service motive, லாப நஷ்ட நோக்குடன் இதை நாங்கள் ஆரம்பிக்கவில்லை இது வரை மணிப்பிரவாள நடையில் இருந்து வரும் வழக்கத்தை சற்று மாற்றித் தூய தமிழிலேயே ஆஸ்திகத்தை பரப்ப வேண்டும் என்பது தான் கீதாசார்யன் பத்திரிகையின் நோக்கம் மாணிக்கம் போன்ற தமிழும், பவழம் போன்ற வடமொழியும் கலந்ததுதான் மணிப் பிரவாளநடை என்பது எல்லோரும் அறிந்தது. ஆனால் தற்போது லௌகிகத்திலிருக்கும் பலருக்கு அந்த நடை புரிவதில்லை. எனவே எல்லோரும் புரிந்து கொள்ளக் கூடிய எளிய தமிழில் விளக்கவே இப் பத்ரிகை ஆரம்பிக்கப் படுகிறது. வடமொழியை அடியோடு ஒதுக்கி விடுவதல்ல

எங்கள் நோக்கம். எப்படி ஆங்கிலத்தை அடியோடு ஒதுக்கி விட்டு தூய தமிழில் நம் அன்றாட வாழ்க்கையை நடத்த முடிவ தில்லையோ அப்படியே ஸம்ப்ரதாயத்திலும் வட மொழியை ஒதுக்க முடியாது. எனவே கூடிய வரையில் எல்லா ஜனங் களும், வேதாந்த சாரத்தை, பிரபந்த பாசுரங்களின் உண்மை வடிவை சரளமாகப் புரிந்து கொள்ள வேண்டும்; அதை தூய தமிழில் இந்த கீதாசார்யன் பத்திரிகை வாயிலாக அளிக்க வேண்டும் என்பது எங்களது குறிக்கோள். நாங்கள் எங்களது குறிக்கோளை அடைய இங்கு வந்திருக்கும் எல்லா ஆஸ்திகப் பெரு மக்களும் உதவி செய்ய வேண்டும். இந்தப் பத்திரிகையை ஆரம்பித்திருக்கும் நாங்கள் எல்லோரும் இளைஞர்கள். உங்க ளுடைய ஆதரவு எங்களுக்கு என்றும் தேவை".

பிறகு மலரை வெளியிட்டார் உயர் மன்ற உயர் நீதிபதி,

## உயர் திரு. T. ராம பிரசாத ராவ்

"இப் புத்தகத்திற்கு கீதாசார்யன் என்ற அற்புதமான பெயரைக் கொடுத்திருக்கிறார். திரு. வெங்கட கிருஷ்ணன் அவர்கள். அவரை நான் மனமாரப் பாராட்டுகிறேன். மலரை வெளியிட வேண்டும் என்று அவர் என்னைக் கேட்டுக் கொண்டதும், நான் உடனே ஒப்புக் கொண்டேன். அவரு டைய அரிய சேவையை நீங்கள் எல்லோரும் உத்சாகப்படுத்த வேண்டும். இப் புத்தகத்தை எல்லா ஆலயங்களிலும், வாங்கி பயனுற, அறநிலையப் பாதுகாப்பு ஆணையர் I. A. S. அவர் களைக் கேட்டுக் கொள்கிறேன். அவர் நினைத்தால் இது சாத் தியமாகும். என்றார்." மேலும் கீதையின் தத்துவங்களைப் பற்றி ஆங்கிலத்தில் உரையாற்றினார்.

மலரைப் பெற்றுக் கொண்ட ஆணையாளர்

## திரு. டி. சுப்ரமண்யன் I. A. S.

"இருபத்தைந்து வயது கூட நிரம்பப் பெறாத இந்த கீதா சார்யன் ஆசிரியர் திரு M. A. வெங்கட கிருஷ்ணனை நான் மன தாரப் பாராட்டுகிறேன். இப்படிப்பட்ட ஆஸ்திக நோக்கு

கொண்ட காரியங்களை இளைஞர்கள்தான் ஆரம்பிக்க வேண்டும். அவர்களால் எதையும் சாதிக்க முடியும். சற்று முன்னர் மலரை வெளியிட்டுப் பேசிய உயர்திரு நீதிபதி அவர்கள் கட்டளையிட்டபடி இந்த கீதாசார்யன் மாதப் பத்திரிகையை எல்லா ஆலயங்களிலும் வாங்கும் படி செய்கிறேன். நீதிபதியின் ஆணையல்லவா! நான் எப்படி மறுக்க முடியும்?

இப்புத்தகத்தின் ஆசிரியர் வரவேற்புரையில் தற்போது ஆஸ்திகம் வளர்ந்திருக்கிறதா, குறைந்திருக்கிறதா, என்ற சந்தேகத்தைக் கிளப்பினார். இளைஞரல்லவா, சந்தேகம் எழத்தான் செய்யும். அற நிலையப் பாதுகாப்பு ஆணையர் என்ற ரீதியில் நான் ஆணித்தரமாகக் கூறுவேன். ஆஸ்திகம் நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டுதான் இருக்கிறது என்று. புள்ளி விவரப்படி பத்து ஆண்டுகளுக்கு முன்பு பத்தாயிரம் கோயில்களே இருந்தன நம் தமிழ் நாட்டில்; இப்போது 30, 000க்கும் அதிகமாக வளர்ந்திருக்கின்றன. இதுவே ஆஸ்திகத்தின் வளர்ச்சிக்கு ஒரு சிறந்த எடுத்துக் காட்டு. இப் பத்திரிகை ஆசிரியரை நான் ஒன்று வேண்டுகிறேன். அதாவது த்வைதம், அத்வைதம், விசிஷ்டாத்வைதம், என்ற இம் மூன்றுக்கும் உள்ள ஒற்றுமை, வேற்றுமைகள் கீதாசார்யன் பத்திரிகை மூலமாகவே ஆஸ்திகப் பெருமக்களுக்கு தெளிவு படுத்தியே ஆகவேண்டும். **"Unity in diversity"** என்பதுபோல சமயங்கள் பலவாக இருந்தாலும், அவைகளிலே எப்படியும் ஒற்றுமையைக் காண வேண்டும். இப்பாதையில் செல்லும்போது குறிக்கோளை மறந்து விடக் கூடாது. தமிழில் எதையும் எழுதலாம். எதையும் சாதிக்க முடியும். அனைத்துப் பிரபந்தங்களும் பாசுரங்களும், தூய தமிழிலேதான் இருக்கின்றன. அப்படி இருக்க, மணிப் பிரவாள நடைக்கு அவசியமே கிடையாது. குறிப்பாக ஒன்று கூறுகிறேன். இப்போது இருக்கும் அரசு ஆஸ்திகத்தை வளர்க்க மிகவும் அக்கறை காட்டுகிறது என்பதை நான் நிச்சயமாகக் கூறுவேன். இந்த அரிய சந்தர்ப்பத்தை இப் பத்திரிகை பயன்படுத்திக் கொண்டால் மிகவும்

நல்லது. இளைஞர்களின் ஆர்வத்தையும் முயற்சியையும் மீண்டும் ஒருமுறை பாராட்டுகிறேன்''.

பிறகு தீபம் ஆசிரியர்,

## திரு. நா. பார்த்தசாரதி

''எவன் பெயரை உச்சரித்தால் நம் மனத்தில் எழும் சந்தேகங்கள் எல்லாம் அகலுமோ. அந்தப் புனிதமான தீராசார்யன் பெயரைத் தாங்கி வரும் இந்த மாத சுவரின் ஆசிரியர் திரு. வெங்கடகிருஷ்ணனை நான் மனமாரப் பாராட்டுகிறேன். ஆசிரியர் வரவேற்புரையில் சில சந்தேகங்களை எழுப்பினார். சமஸ்கிருதத்தை வடமொழி என்று அவர் குறிப்பிட்டார். அப்படி அவர் கூறியது சரியல்ல என்று நான் சொல்வேன். சமஸ்கிருதத்தை தமிழாக்கி அதை வடமொழி என்று கூறுவது சரியாகாது. சமஸ்கிருத மொழி ஒரு உலக மொழி. ஆழங் காண முடியாது. சமஸ்கிருத மொழியில் பல இதிகாசங்களும் புராணங்களும் மலிந்து கிடக்கின்றன. அம் மொழியின் இனிமை தனியானது. 'சமஸ்கிருத மொழியை எவன் ஒருவன் கற்றுக் கொள்கிறானோ அவனுடைய சுபச்சில் ஒரு தெளிவு, பாஷைஞானம் தெளிவாக இருக்கும். உச்சரிப்பும் அப்படியே ஆஸ்திகத்தை சமஸ்கிருத மொழிதான் பெரும்பாலும் வளர்ந்து வந்தது. வளர்த்தும் வருகிறது. மணிப் பிரவாள மொழியில் புனையப்பட்டிருக்கினவோ. அவைகளை அம்மொழி தெரியாத தற்கால மக்களுக்காக வேண்டி தமிழாக்கம் செய்ய வேண்டும் என்று யாராவது துணிந்தால் அது சரியான காரியமாகாது. மணிப்பிரவாள மொழியின் உன்னதத்தை நாம் மொழி பெயர்ப்பதினால் மூலகாவியத்தை சிதைத்து விடுவோம். பழமையை, ஆங்கிலேயர்கள் எவ்வளவு ஜாக்கிரதையாக ஆயிரமாயிரம் ஆண்டுகளுக்குப் பிறகும் புனிதமாகக் காப்பாற்றுகிறார்களோ, அதே போன்று நாமும் பழைய காப்பியங்களை அதே ரீதியில் காப்பாற்றவேண்டும். தமிழுக்காக யாரும்

(தொடர்ச்சி 41ம் பக்கம் பார்க்க)

# பகவத் கீதாஸாரம்

ஸ்ரீ உ. வே. மஹாவித்வான் ப்ரதிவாதி பயங்கரம்

## அண்ணங்கராசாரியர் ஸ்வாமி

இந்த கீதா சாஸ்த்ரமானது அர்ஜுனனுக்கும் கண்ணபிரானுக்கும் ஸம்வாதரூபமாக அவதரித்திருக்கச்செய்தேயும் த்ருதராஷ்ட்ரனுக்கும் ஸஞ்ஜயனுக்கும் ஸம்வாதரூபமாகவும் அவதரித்ததாயிற்று. கீதை தொடங்கும்போதே "த்ருதராஷ்ட்ர உவாச" என்று அவன் பெயரைத் தான் நினைக்கவும் சொல்லவும் ப்ராப்தமாகிறது. த்ருதராஷ்ட்ரன் ஸஞ்ஜயனை நோக்கிக் கேட்க, குருக்ஷேத்ரத்தில் நடந்த செய்திகளை யெல்லாம் அவனுக்கு ஸஞ்ஜயன் சொல்லுவதாகவும், கீதாசாஸ்த்ரமும் ஸஞ்ஜயன் வாயிலாகவே வெளிவருவதாகவும் அமைந்திருக்கின்றது. பதினெட்டாமத்தியாயத்தில் எழுபத்து மூன்றுவது ச்லோகத்தோடு க்ருஷ்ணார்ஜுநஸம்வாதம் முடிந்துவிட்டது. அதற்குமேலுள்ள ஐந்து ச்லோகங்களும் த்ருதராஷ்ட்ரனுக்கு ஸஞ்ஜயன் சொல்லி முடிப்பதாகவுள்ளது.



பாண்டவர்களும் கௌரவர்களுமாகிற இருவகுப்பினருடையவும் சேனைகள் போர்புரிய ஆயத்தமாயிருந்த வளவில் வேதவ்யாஸ பகவான் தன் புதல்வனான த்ருதராஷ்ட்ரனிடம் வந்து "மன்னவனே! இனி நடக்கப் போகிற யுத்தத்தில் உனது புத்திரர்கள் தவறுது விநாசமடையப் போகிறார்கள்; அந்த யுத்தத்தை நீ நேரில் காண விரும்புகின்றாயாகில் அதைக் காண்பதற்கீடான கண்ணை

உனக்கு அளிப்பேன்' என்றார். அதுகேட்ட த்ருதராஷ்ட்ரன் 'நான் அதைக்காண விரும்புகின்றிலேன்; உள்ளபடி அனைத்தையும் கேட்பிக்கவேணும்' என்றான். அப்போது வேதவ்யாஸர் தம்முடைய சிஷ்யனும், த்ருதராஷ்ட்ர ஸாரதியுமான ஸஞ்ஜயனையழைத்து யுத்த விஷயத்தில் அவன் ஸர்வஜ்ஞனாம்படி அநுக்ரஹம் செய்து, 'ஆதியோடந்தமாக யுத்த விருத்தாந்தங்கள் முழுவதையும் த்ருதராஷ்ட்ரனுக்கு நீ சொல்லக் கடவாய்' என்று நியமித்து (வ்யாஸர்) தம் இருப்பிடம் சென்று சேர்ந்தார். பிறகு ஸஞ்ஜயன் யுத்தரங்கத்தில் வந்து, அர்ஜுனனுக்கு கீதோபதேசம் செய்தருளாநின்ற ஸ்ரீக்ருஷ்ண பரமாத்மாவின் முகாரவிந்தத்தில் நின்றும் பெருகும் கீதாம்ருதத்தை ஸாக்ஷாத்தாக ச்ரவணம் பண்ணி வியாஸருடைய அநுக்ரஹத்தினால் கிடைத்திருந்த திவ்யஜ்ஞானத்தாலே விவித விசித்ர விருத்தாந்தங்களெல்லாவற்றையும் தனக்கோர் அபாயமின்றிக்கே கரதலாமலகமாகக் கண்டுணர்ந்து அந்த யுத்தரங்கத்தில் நின்றும் போய் த்ருதராஷ்ட்ரனிடம் சேர்ந்து, யுத்தத்தைப் பற்றியே சிந்தித்துக் கொண்டிருந்த அவனுக்கு யுத்தச் செய்திகளை முதலே பிடித்துச் சொன்னான். ஆக இந்த ஸம்வாதம் கீதாசாஸ்த்ரமாக உலகில் பரவி அனைவரையும் புனிதமாக்கிக் கொண்டு வருகின்றது.

பக்த பரதந்திரனான ஸ்ரீக்ருஷ்ண பரமாத்மா தன்னுடைய பரம பக்தனான அர்ஜுனனுக்குத் தேர்ப் பாகனாயிருந்து கொண்டு குருக்ஷேத்திர மென்னுமிடத்தில் வந்து போர்புரிய அணிவகுத்து நின்றனன். அப்பொழுது அர்ஜுனன் கண்ணபிரானை நோக்கி 'பெருமானே! இந்தப் போரில் யான் யாருடன் போர் புரிவது தகுதியானது? துர்ப்புத்தி வாய்ந்த துரியோதனனுக்குத் துணை புரிவதற்காக யார் யார் வந்திருக்கிறார்களென்பதை நான் கண்டு தெரிந்து கொள்ளுமாறு தேரை இரண்டு சேனைகளினிடையில் நிறுத்த வேணும்' என்று கூற அப்படியே கண்ணபிரான் இரண்டு படைகளினிடையே தேரை நிறுத்தி 'அர்ஜுனா! இவ்விரு படைகளிலுமிருக்கின்ற போர் வீரர்களைப் பாராய்' என்றனன்.

அப்போது அர்ஜுனன் போர்க்களத்தில் வந்து நின்றிருக்குமவர்கள் தந்தைகளாயும் புத்திரர்களாயும் பேரன்மார்களாயும்

தோழன்மார்களாயு மிருப்பது கண்டு அவர்களிடத்து இரக்கங் கொண்ட மனத்தனாய் ஸ்ரீக்ருஷ்ணனை நோக்கி 'கண்ணா! போர் புரிய ஆயத்தர்களாயிரா நின்ற இந்த உற்றுருறவினரைக் காணவே எனது காண்டீவ தனுசு கையில் நின்றும் சோர்கின்றது; என்னுடல் எரிகின்றது; மயிர்க் கூச்செறிகின்றது; தேஹம் நடுங்குகின்றது; நான் நிற்கமாட்டேன்; என்மனம் குழம்புகின்றது; அபசகுனங்கள் காண்கின்றன; அமர்க்களத்தில் இவ்வுறவினர்களைக் கொன்று நான் என்ன நன்மையடையப் போகிறேன்? எனக்கு யுத்தமும் வேண்டா, யுத்தத்தில் வெற்றியும் வேண்டா, இராச்சியமும் வேண்டா, இன்பமும் வேண்டா; உற்றுருறவினர்களோடு கூடிக்களித்து வாழ்வதற்காக வல்லரோ பொருட்செல்வம் விரும்பப் படுகின்றது; அன்னவர்களனைவரும் உடலையும் உயிரையும் செல்வத்தையும் பொருள் படுத்தாது போர் புரிய வந்து நிற்கின்றனரே! அவர்களை வென்று கொன்ற பின்பு இந்த ராஜ்யத்திலுண்டாகு மின்பம் யாதோ? பிறகு நான் பிழைத்திருந்துதான் என்னபயன்? மூவுலகவின்பமும் கிடைப்பதா யிருந்தாலும் நான் இவர்களைக் கொல்லமாட்டேன். இந்த அற்ப பூமிக்காக இவர்களைக் கொல்ல நினைப்பதும் ஏலாதது. நெருப்பிட்டுக் கொல்பவர்களும், விஷமிட்டுக் கொல்பவர்களும், பிறருடைய தனங்களையும் பூமியையும் மாதரையும் கொள்ளை கொள்பவர்களுமான ஆததாயிகளைக் கொலை செய்வதில் குற்றமில்லையாகையாலே அப்படிப்பட்டவர்களில் தலைவர்களான இத் துரியோதனாதியர் கொலை செய்யத் தகுந்தவர்களேயானாலும் இவர்களைக் கொல்ல நான் விரும்புகின்றிலேன். இந்த பந்துக்களைக் கொன்று நான் எப்படி ஸுகமடைவேன்? க்ருஷ்ணா! ராஜ்யஸுகங்களுக்காக உறவினரைக் கொல்வது பெரும்பாவமல்லவோ? ஆகையால் அஸ்த்ர சஸ்த்ரங்களை நான் பிரயோகிக்கப் போகிறதில்லை. பிரயோகியாமல் வாளாவிற்குமென்னைத் துரியோதனாதிகள் கொன்ற போதிலும் அதனால் எனக்கு வருத்தமில்லை; அது எனக்கு க்ஷேமமேயாகும்' என்று கூறி வில்லைக் கீழே போகட்டு வருத்தமும் கலக்கமும் மிகப் பெற்றுத் தேரிடையே உட்கார்ந்து விட்டான்; என்கிற இதுவே நாற்பத்தேழு சுலோகங்கள் கொண்ட முதலத்யாயத்தின் பிரமேயம்.

இப்படி அஸ்தாநே கலங்கின அர்ஜுனனுடைய கலக்கத்தைப் போக்கி அவனை யுத்தத்திலே மூட்டுவதற்காகக் கண்ணபிரான் இரண்டாமத்யாயத்திலிருந்து பல பல வுபதேசங்களைச் செய்தருள அவனும் தெளிவுபெற்று 'ஸ்திதோஸ்மி கதஸந்தேஹ: கரிஷ்யே வசனம் தவ' என்று சொல்லிப் போர் புரிய இசைந்தானென்பது கீதையின் முழுப்பொருள். இவ்விஷயத்தில் புத்திமான்கள் முக்கியமாக ஆலோசிக்கத் தக்கவை இரண்டு விஷயங்களுண்டு. யுத்தத்திற்குக் குதூஹலியாய்ப் போர்க்களம் வந்து சேர்ந்த அர்ஜுனன் யுத்தாடம்பரம் செய்ய வேண்டியிருக்க அது செய்யாமல் தேர்ப்பாகனுயிரா நின்ற தேவதேவனை நோக்கி உபயஸைன்யங்களிலுமிருக்கிற பந்துக்களை இன்னாரின்னாரென்று பார்ப்பதற்காக இந்தத் தேரைச் சிறிது முன்னே கொண்டுபோய் உபயஸேனைகளின் முன்னே நிறுத்து என்றானே; இப்போது அர்ஜுனன் இப்படிச் சொல்ல வேண்டிய அவச்யமேயில்லை. ஏற்கனவே இவன் தெரிந்து கொள்ளாத அம்சம் என்ன இருக்கிறது? யுத்தத்தில் எதிரிகளாக வரப் போகிறவர்கள் அல்லது வந்திருக்கிறவர்கள் இன்னாரின்னாரென்பதை அர்ஜுனன் இதற்கு முன் தெரிந்து கொள்ளாமல் இனிமேலா தெரிந்து கொள்ளப் போகிறான்; இல்லையே, அவர்களையெல்லாம் வதைத்தொழிக்க வேணுமென்கிற ஊக்கங் கொண்டே போர் புரிய ஆயத்தனாய் வந்து நின்றவன இப்போது இன்னாரின்னார் போர்புரிய வந்திருக்கிறார்களென்பதைக் கண்டறிந்து கொள்ள வேணுமென்றது சிறிதும் பொருத்தமாக இல்லையே! இது எப்படி பொருந்தும்? என்பது முதன் முதலாக ஆலோசிக்க வேண்டிய விஷயம். இனி மற்றொரு விஷயமாவது யுத்தம் பண்ண மாட்டேனென்ற அர்ஜுனனை யுத்தஞ் செய்ய இசைவிக்க வேண்டியதுதானே கண்ணபிரானுக்குக் கர்த்தவ்யம்; அதற்கு இவ்வளவு விஸ்தாரமான கீதா சாஸ்த்ரம் வேணுமோ? 'அப்பா! நீ க்ஷத்ரியனாகையாலே யுத்தஞ்செய்யக் கடமைப் பட்டவனாகிறாய்' என்கிறவிவ்வளவை உபபத்திகளுடன் சொன்னால் போதும்; இதற்கு ஒரு அத்யாயமே அதிகம். அத்தனை யத்யாயங்கள் வளர்த்திருப்பது எதற்காக? என்பது. இவ்விரண்டு விஷயங்களுக்கும் ஸமாதானங்களை அடுத்த இதழில் காண்போம்.

# திருவாய்மொழியும் த்வயமும்

ந்யாய வேதாந்த வித்வான் வாகம்ருதவர்ஷி
**ஸ்ரீ உ. வே. வேளுக்குடி K. வரதாசாரியர் ஸ்வாமி**

ச்ரிய:பதியான ஸர்வேச்வரன் ஸ்ரீவிஷ்ணு லோகத்தில் த்வயமான மஹாமந்த்ரத்தை, மந்த்ர ரத்நத்தை பிராட்டிக்கு உபதேசம் பண்ணியருளினான். அந்த த்வயத்திற்கு பல அர்த்தங்களை அருளிச் செய்துள்ளனர் நம் பூர்வாசாரியர்கள்.



பிள்ளைலோகாசாரியர் தம்முடைய ஸாரஸங்க்ரஹம் எனும் க்ரந்தத்தில் த்வயம் பத்து அர்த்தங்களைத் தெரிவிப்பதாகக் கூறுகிறார். அந்த பத்து அர்த்தங்களும் திருவாய் மொழியின் பத்து பத்துக்களால் விவரிக்கப்படுகின்றன என்றும் நிரூபித்துக் காட்டியருள்கிறார் ஸ்ரீ பிள்ளைலோகாசாரியர்.

த்வயத்தின் முதல் பதம் 'ஸ்ரீமந்' என்பது. இதில் ஸ்ரீ சப்தத்தாலே பிராட்டியின் ப்ரபாவம் கூறப்படுகிறது. அந்த ஸ்ரீமச்சப்தம் எம்பெருமானுடைய ச்ரிய:பதித்வத்தையும் அதனால் அவனுக்குண்டான ஏற்றத்தையும் தெரிவிக்கிறது. அதை விவரிப்பது தான் திருவாய்மொழியின் முதல்பத்து.

திருவாய்மொழி முதல்பத்தின் முதல் திருவாய்மொழி "உயர்வற"வில் ப்ரஹ்மசப்தார்த்தத்தை விவரணம் பண்ணி

யருளுகிருர் நம்மாழ்வார். அந்த ப்ரஹ்மம் நாராயணனே என்பது இரண்டாம் திருவாய்மொழி (வண் புகழ் நாரணன் இத்யாதிகளால்). அந்த நாராயணன் ஸ்ரீமாந் என்பது மூன்ரும் திருவாய்மொழி.

வேதார்த்தமான கர்மங்களை ஸ்ரீஜைமிநிபகவான் விசாரித்து ஸூத்ரம் அருளிச்செய்தார். அது கர்மமீமாம்ஸை. அது பன்னிரண்டு அத்யாயங்கள்கொண்டது. அவரே தேவதைகளை விசாரிக்கிருர் மேலே நான்கு அத்யாயங்களால். இது தேவதா மீமாம்ஸை. இதுகர்மகாண்டசேஷமாகும். ஆகஜைமிநிபதிஞறு அத்யாயங்கள் கொண்ட மீமாம்ஸா சாஸ்த்ரத்துக்கு கர்த்தா: மேலே ஸ்ரீவேதவ்யாஸரருளிச்செய்த சாரீரக சாஸ்த்ர மானது ப்ரஹ்மத்தைப் பற்றி ஆராய்வதால் ப்ரஹ்மமீமாம்ஸா எனப்படுகிறது. இது நான்கு 3 அத்யாயங்கள் கொண்டது. அந்தப்ரஹ்மம் நாராயணனே என்பது சாரீரகார்த்தம். அவன் ஸ்ரீமாந் என்றும் சொல்ல வேண்டும் என்பது ஆழ்வார் திரு வுள்ளம். இதையே ஆழ்வார் முதல் மூன்று பதிகங்களால் விவரித்தருள்கிருர். இதையடியொற்றியே எம்பெருமானரும் ஸ்ரீபாஷ்ய மங்கள ச்லோகத்திலே ப்ரஹ்மணி ஸ்ரீநிவாஸே என்று அறுதியிட்டார். ப்ரஹ்மமான நாராயணன் ஸ்ரீமானே என்பது மூன்ரும் திருவாய்மொழி: * பத்துடையடியவர்க்கெளி யவன் பிறர்களுக்கரியவித்தகன்* மலர்மகள்விரும்பும் நமரும்பெற லடிகள்* அடியவர்க்கெளியவன் என்றுஸெளலப்யம். அரும்பெற லடிகள்என்று பரத்வம். இவை இரண்டும் எம்பெருமானுக்கு வாய்த்தது எதனுல்? மலர்மகள் விரும்பும் என்று அவன் ச்ரிய: பதியாய் இருக்கிற படியாலே. எம்பெருமானுடைய பரத்வ ஸெளலப்யங்களுக்கடி ச்ரிய:பதித்வமே. மலர்மகள் விரும் பும் என்ற பிறகு நம் அரும்பெறலடிகள் என்ற படியால் பிராட்டி ஸம்பந்தத்தையிட்டே எம்பெருமானுக்கு மேன்மை என்று தெரிகிறது

ஒன்பதாம் திருவாய்மொழி முதல்பாட்டில் "என்னமுதம் சுவையன் திருவின் மணாளன்" என்ருர் ஆழ்வார். எம்பெரு

மான் அமுதம். அமுதம் ரஸ்யமாயிருக்குமேயொழிய ரஸிகமா யிராது. ஆனால் எம்பெருமானாகிற அமுதம் ரஸிகமாயுமிருப் பதால் அவன் சுவையன். அந்த ராஸிக்யம் அவனிடம் ஏற் பட்டதற்குக் காரணம் பிராட்டி ஸம்பந்தம். அவன் திருவின் மணாளன். இவ்வாறு அவனுக்கு ரஸ்ய ராஸிக்யங்கள் ஏற்படக் காரணம் அவனுடைய ச்ரிய:பதித்வமே.

மேலும் மலராள் மைந்தன் (1-5-9) திருமகளார் தனிக் கேள்வன் (1-6-9) பூமகளார் தனிக்கேள்வன் (1-9-3) திருவின் மணாளன் என்னுடைச் சூழலுளானே (1-9-1) "மலராள் மணவாளனே" (1-10-4) என்றும் ச்ரிய:பதித்வம் ப்ரதிபாதித மாயிற்று திருவாய்மொழியின் முதல்பத்தால் என்கிறார் பிள்ளைலோகாசாரியர். பூர்வவாக்யத்தில் கூறப்பட்ட சரணாகதி ஸப்ரகாரமாக ஸக்ருத் கரணீயம் என்பர் நம்பூர்வர்கள். அதாவது பெருமானிடத்தில் சரணாகதி செய்யுமவர்கள் முற் பட இதர உபாயங்களைத் துறக்கவும்வேணும், பிராட்டியைப் புருஷகாரமாகப் பற்றவும் வேணும். ஆகையாலே பூர்வ வாக்யத்தில் ஸ்ரிய:பதித்வம் ஸ்ரீமத் சப்தத்தாலே கூறப்பட்டது புருஷகார பூதையான பிராட்டியினுடைய நித்ய ஸம்பந்தம் பெருமானுடன் உண்டென்று. இளைய பெருமாள் சக்ரவர்த்தி திருமகன் திருவடிகளை உபாயமாகப்பற்றும் போது பிராட்டி யைப்பற்றிப் பற்றினார் என்று ஸ்ரீராமாயணம் கூறுகிறது. "ஸீதாமுவாச அதியசா: ராகவம் ச மஹாவ்ரதம்" என்று ஸ்ரீராமாயண வசநம் இங்கே நினைக்க வடுக்கும்.

ஆக முதல் பத்து முழுதும் த்வயத்தின் பதார்த்தங்களில் முதலாவதான ச்ரிய:பதித்வத்தை தெரிவிக்கிறது என்ற தாயிற்று. (தொடரும்)

# தேவு மற்றறியேன்

பேராசிரியர் Dr. V. V. ராமாநுஜம்.

திருக்குருகூரும் சடகோபனும் : ஆழ்வார்கள் பாடியுள்ள திவ்வியப்பிரபந்தங்களுள் திருவாய்மொழி ஒப்பற்றது. அதைப்பாடிய சடகோபரும் ஒப்பற்றவர். அவர் தோன்றிய திவ்வியதேசமான திருக்குருகூரும் ஒப்பற்றது. இந்தப் பெருமைகளைப் பற்றி இன்னும் சிறிது பேசி மகிழ்வோம். தென்பாண்டி நாட்டில் கங்கையை ஒத்த தூய்மை வாய்ந்த புண்ணிய நதியான பொருநையாற்றங் கரையில் (தாமிரவருணிக் கரையில்) உள்ள வளமான பிரதேசம் திருவழுதி வளநாடு என்பது. இதன் தலைநகரமே திருக்குருகூர். இந்த நாட்டையாண்டவர்கள் நமது ஆழ்வாரின் மூதாதையான திருவழுதி வளநாடன் என்பவருடைய வழித்தோன்றலான உத்தமர்கள். பின்னர் ஆழ்வார் திருநகரி என்று போற்றப் பெற்ற குருகை தொன்மை வாய்ந்தது. பொலிந்து நின்ற பிரான் (ஆதிநாதன்) திருக்கோயில் கொண்டுள்ள திவ்வியத்தலம். திருவழுதி வளநாடனுடைய வழித்தோன்றலான காரி என்பவருக்கும், அவர் மனையாட்டியும் திருவண்பரிசாரத்து திருவாழ்மார்ப ரென்பாருடைய மகளுமான உடைய நங்கை என்ற மங்கைநல்லாளுக்கும் திருக்குறுங்குடி நம்பியின் திருவருளால் திருக்குருகூரில் பிறந்தவர் குருகூர்ச் சடகோபன். சடகோபனை குறுங்குடி நம்பியின் அவதார விசேஷம் என்றும், சேனைமுதலியார் அம்சம் என்றும், எம்பெருமான் திவ்வியாபரணமான கௌஸ்துபத்தின் அம்சம் என்றும் பெரியோர் பகர்வர். குழந்தைகள் பிறந்தவுடன் அவைகளைத் தீண்டி ஒருவித அறிவின்மையை விளைவித்து அழுதல் அரற்றுதல் முதலியன செய்விக்கும் சடம் என்ற காற்றை இக்குழந்தை (மாறன்) 'ஹூம்' என்று கோபித்து விரட்டிய படியால் சடகோபன் என்று பெயர் பெற்றது.

சடகோபனுடைய பிறப்பால் குருகூர் திருநகரியாகிச் சிறப்புற்றது. நமது தரிசனத்தின் வளர்ப்புத் தாயான எம்பெருமானார் (ராமாநுசர்) திவ்யதேச யாத்திரையில் இத்தலத்தை அணுகியதும்,

> இதுவோ திருநகரி? ஈதோ பொருநல்?
> இதுவோ பரமபதத்தெல்லை?—இதுவோதான்
> வேதம் தமிழ் செய்து மெய்ப்பொருட்கு முப்பொருளாய்
> ஓதும் சடகோபன் ஊர்?

என்று வியந்து விழுந்து வணங்கியதாக வரலாறு கூறும்.

குருகூர்ச்சித்தன் : திருநகரியில் வாழும் சடகோபனடியார் பெருமை இங்கு நடந்த ஒரு நிகழ்ச்சியினால் விளங்கும். ஒரு காலத்தில் தாமிரவருணி நதியின் வடகரையில் வாழ்ந்த சித்தன் ஒருவன் வளர்த்து வந்த நாயானது தென்கரையிலுள்ள திருநகரிக்குத் தினமும் வந்து அங்கு ஸ்ரீவைஷ்ணவர்கள் உண்டு மிகுந்த வீதியில் கிடக்கும் எச்சில் சோற்றைத் தின்று வருமாம். ஒருநாள் திருநகரியிலிருந்து திரும்புகையில் எதிர்பாராமல் ஆற்றில் வெள்ளம் வர, நாயும் நீந்தி காலோய்ந்து போய் நீரில் அமிழ்ந்து இளைப்ப, அதன் தலை வெடித்து அதன் ஆத்மா ஒரு ஒளிப்பிழம்பாய் வெளிக் கிளம்பி வானை நோக்கிச் சென்றதை நேரில் கண்ட சித்தன், "குருகூர்வாழ் வைணவர்கள் அமுது செய்த எச்சிலையுண்டதனால் ஞானியராலும் யோகியராலும் சித்தர்களாலும் பெற இயலாத இப்பேற்றைப் பெற்றதே!" என்று மனமுருகி,

> வாய்க்கும் குருகைத்திருவீதி எச்சிலை வாரியுண்ட
> நாய்க்கும் பரமபதமளித்தாய்! அந்த நாயோடிந்தப்
> பேய்க்கும் இடமளித்தால் பழுதோ? பெருமாள் மகுடஞ்
> சாய்க்கும் படிக்குக் கவிசொல்லு ஞானத்தமிழ்க்கடலே!

என்று ஆழ்வாரைப் போற்றித் துதித்து நற்கதி யடைந்தனனாம். இந்த ஐதிஹ்யத்துக்குச் சான்றாக தாமிர வருணி நதிக்

கரையில் ஆழ்வார் தீர்த்தவாரி மண்டபத்தூணில் ஒரு சிற்பம் உள்ளதை இன்றும் காணலாம்.

மதுரகவி :—திருநகரிக்குக் கூப்பிடு தூரத்தில் உள்ளது வைத்தமாநிதி எம்பெருமான் கோயில் கொண்டுள்ள திருக்கோளூராகும். இத்தலத்தை பாடத்திருக்குருகூர்—செல்வத் திருக்கோளூர் என்று போற்றுகிறார் நம் பொய்யிலாத மணவாள மாமுனிகள். இத் தலத்தன் செல்வம் சான்றோர்களான திருமாலடியார்களும் அவனடியாரடியார்களுமே. இவ்வூரில் பிறந்த திருமாலின் மெய்யன்பர் ஒருவர் வடநாட்டில் யாத்திரையாக ஸஞ்சரித்திருந்தவர் ஒரு நாள் தென் திசை நோக்குங்கால் மிகவும் பிரகாசமான ஒரு ஒளியைக்கண்டு அதனால் ஈர்க்கப் பெற்று அதையே குறிக் கோளாகக் கொண்டு வந்து திருநகரி வந்து சேர்ந்தார். வந்தவர் ஆதிநாதன் திருக்கோயிலில் ஒரு புளியமரத்தடியில் தேஜோமயமாய் தியானத்தில் வீற்றிருந்த நமது சடகோபனைக் கண்டார்.

சடகோபன் குழந்தைப்பருவம் முதலே தாய்ப்பாலருந்தவில்லை. மற்றய உணவு எதையும் கொள்ளவில்லை. பகவானுடைய நியமனத்தினால் சேனையர் கோன் வந்து இவருக்கு திருவிலச்சினை சாதித்து (சங்கு சக்கர அடையாளங்களைப் பொறித்தல்) வைணவ மந்திரங்களை உபதேசித்துப் போயினார். உண்ணுஞ்சோறு பருகுநீர் தின்னும் வெற்றிலை—எல்லாம் கண்ணன் என்றிருந்தவர் ஆழ்வார். அதாவது இவருக்கு பகவதநுபவம் தவிர்த்து வேறு உணவு இல்லை. வேறு போது போக்குமில்லை. இவருக்கு நிழல் தந்து இருந்த புளியமரம் திருவநந்தாழ்வானுடைய (ஆதிசேஷனுடைய) அவதாரம்என்பதால் திருப்புளியாழ்வார் எனப்பெறும். ஆழ்வாருடைய தேஜஸ்ஸைக்கண்டு இவர் அவதாரவிசேஷம் என்று அறிந்த மதுரகவி, ஒருகல்லைத்தூக்கிப் போட்டு ஒலியெழுப்ப, ஆழ்வாரும் திருக்கண்விழித்துப் பார்க்க, அவருடைய ஞானபூர்த்தியை அறிவதற்காக, "செத்தத்தின் வயிற்றில் சிறியது பிறந்தால் அது எத்தைத் தின்று எங்கே கிடக்கும்?" என்று புதிர்போட்டாற்போல் ஒரு வினாவினைக்

கேட்டார். செத்தது என்பது அசித்து—மண் நீர், தீ, கால் விசும்பு என்ற ஐந்து பொருள்களாலான உடல். இதில் மிகவு சிறிதான (அணுமாத்ரம்) ஜீவாத்துமா குடிபுகுந்தால் (பிறந் தால்) என்னவாகும்? என்பது வினா. "அத்தை தின்று அங்கே கிடக்கும்" என்று சுருக்கமாக ஆழ்வார் விடை தந்தார். அந்த சரீரத்தில் இருப்பதால் விளையும் இன்பதுன்பங்களை அநுபவித்து அதிலேயே கிடக்கும் என்றபடி. மதுரகவியும் ஆழ்வாரை ஆசாரியராக வரித்து அவருக்கு எல்லாப் பணி விடைகளையும் செய்து கொண்டு அறியவேண்டுவன எல்லாம் அவரிடம் அறிந்து மகிழ்ந்தார்.

கண்ணிநுண்சிறுத்தாம்பு: பகவதநுபவமாகிற பெருங் கடலில் திளைத்த ஆழ்வார் அவ்வநுபவ முதிர்ச்சியால் பாடின பாசுரங்களைப் பட்டோலை கொண்டார் (எடுபத்தினார்) மதுர கவி. எம்பெருமானிடம் ஆராத காதல் கொண்ட சடகோபனி டம் ஆராத காதல் கொண்டவர் நம் மதுரகவி. இந்தக்காதலை வெளியிடும் அமரகாவியம் மதுரமான பத்துப் பாடல்களைக் கொண்ட கண்ணிநுண்சிறுத்தாம்பு என்ற திவ்யப்பிரபந்தம். பிரபந்தத்தின் ஆரம்பத்திலுள்ள சொற்றொடரை அதற்குப் பெயராக இட்டார் நம்பெரியோர். மதுரமான காவியத்தைப் பாடினமையால் இவர் மதுரகவி என்றும் மதுரகவியாழ்வார் என்றும் போற்றப்படுகிறார். எம்பெருமான் பற்றி ஆயிரம் இன்தமிழ் பாடிய ஆழ்வாருக்கும் கிடைக்காத பெயரை ஆழ்வாரைப் போற்றி பத்தே பாசுரங்கள் பாடி இவர் பெற்றார்.

தென்குருகூர் நம்பி என்னக்கால்
அண்ணிக்கும் அமுதூறும் என் நாவுக்கே!

என்று ஆழ்வாருடைய திருநாமம் தமக்கு இனிப்பதையும்,

நாவினால் நவிற்றின்ப மெய்தினேன்
மேவினேனவன் பொன்னடி மெய்ம்மையே
தேவுமற்றறியேன் குருகூர் நம்பி
பாவினின்னிசை பாடித்திரிவனே

குருகூர் நம்பியான ஆழ்வாரின் திருவடிக்கீழமர்ந்து வாழ்ச்சி பெற்றமையால் ஆழ்வாரையே எல்லாமாகப்பற்றி வேறு தெய்வமறியாமல் ஆழ்வாருடைய இனிய தமிழ்ப்பாக்களைப் பாடி இன்பமுறுவதே பெரும்பயனாகக் கருதியிருந்ததையும் முதலிலே அருளிச்செய்கிறார். ஆழ்வாருடைய தெய்வமான கண்ணனைத் தன்னை இவருக்குக்காட்ட, ஆசார்யன் உகந்தவஸ்து என்று வணக்கம் செய்வதுண்டு. ஆனால் இவர் வணங்கும் தெய்வம் ஆழ்வாரே. இந்தப் பத்து பாசுரங்களை நமது ஆசாரியர்கள் பலபடியாக விளக்கியுள்ளார்கள். இப்பாசுரங்களில் பேசப்பட்ட பொருள்களை மேலே தனி வியாஸத்தில் அநுபவிப்போம்.

திருமந்திரத்தின் மத்திம பதம் :

வாய்த்த திருமந்திரத்தின் மத்திமாம் பதம்போல்
சீர்த்தமதுரகவி செய்கலை

என்று ஸ்வாமி மணவாளமாமுனிகள் இந்தப்ரபந்தத்தைக் கொண்டாடுகிறார். நம் ஆசாரியர்கள் எல்லா திவ்யப்ப்ரபந்தங்களையும் திருவெட்டெழுத்தின் விளக்கமாகக் கொள்வர். திருமந்திரத்தின் விளக்கம் துவயம். துவயத்தின் விளக்கம் திருமந்திரத்தின் விளக்கமே. இம்மந்திரந்திரத்தின் முதல்பதம் ஓம் என்ற பிரணவம்.

கோதிலவாம் ஆழ்வார்கள் கூறுகலைக்கெல்லாம்
ஆதி திருப்பல்லாண்டானதுவும் —வேதத்துக்கு
ஓமென்று மதுபோல்

என்கிறபடியே முறை : ஓம் என்று ஓதியே வேதம் ஓதுவதுபோல திருப்பல்லாண்டு பாடி, உடனே மத்திம பதமான நம: என்பதின் விளக்கமான கண்ணிநுண்சிறுத்தாம்பைப் பாடி பிறகு நாராயணாய பதத்தின் விளக்கமான திருவாய்மொழியைப் பாடுவது ஸம்ப்ரதாயமாகும். இந்த வழியில் திருப்பல்லாண்டை விளக்கியே கண்ணிநுண் சிறுத்தாம்பின் விளக்கத்துக்குச்செல்லவேணுமாயினும்மதுரகவி சொல் மிகவும் சிறியதாகை

யால் அதையே முதலில் நாம் அறிய வேண்டியது அவசியம். "நின் திருவெட்டெழுத்தும் கற்று நானுற்றதும் உன்னடியார்க் கடிமை" என்பது திருமங்கையாழ்வார் திருவாக்கு. "பங்கயக் கண்ணனைப் பயிலும் திருவுடையார் எம்மையாளும் பரமரே" என்று திருவாய்மொழி. அவனடியார்களைத் தொழுதுபணி செய்வது அவனைத் தொழுவதிலும் சிறந்தது. அதிலும், அடியார்களில் தலைவரான ஆசாரியரைத் தொழுது பணிசெய்வது மோக்ஷோபாயத்தில் மிகச்சிறந்தது என்பது நமது ஆசாரியர்களின் திடமான கொள்கை.

மதுரகவியாழ்வாரும், இப்பிரபந்தத்தில் தாம் வெளியிட்டுள்ள நிஷ்டையை நம்பி ஒழுகுமவர்கள் பரமபதத்தை அடைவர்கள் என்கிறார்.

**மதுரகவி சொன்ன சொல்**
**நம்புவார் பதி வைகுந்தம் காண்மினே**

என்று. இந்தப் பிரபந்தத்தின் பெருமையையும் இதில் காட்டப்பட்டுள் சீரிய பொருள்களையும் மேலே காண்போம்.

(தொடரும்)



ஸ்ரீ:
ஸ்ரீமத் வரவரமுநயே நம:

# வசன பூஷணத்தில் ஒருவாக்கு

பேராசிரியர், சொல்லழகர்.

K. A மணவாளன். M. A. B. O. L.

அதிக தாகமுள்ளவனு யிருக்கிறுன் ஒருவன். அப்போதே தண்ணீரைப்பருகி விடாயைத் தீர்த்துக் கொள்ள வேண்டிய நிலே. அவன் நிற்கின்ற பூமிக்கடியிலே தண்ணீர் உள்ளது. கடப்பாறையும், மண்வெட்டியும் கொண்டு வெட்டியெடுத்தா லன்றி, அத்தண்ணீர் குடிக்கக் கிடைக்காது.

எம்பெருமானுக்கு ஐந்து நிலேகள் கூறப்படுகின்றன. 1. அவன் வைகுண்டத்தில் எழுந்தருளியிருக்கும் இருப்பு பரத்வம எனப்படுகிறது. 2. அவன் திருப்பாற் கடலில் சயனித்திருக்கும் இருப்பு வியூஹம் எனப்படுகிறது. 3. உலகப் பொருள்களனேத்திலும் மறைந்து உறையும் அவனுடைய இருப்பு அந்தர்யாமித்வம் ஆகும். 4. இராமன் கண்ணன் போன்ற அவதாரங்கள் எடுத்தது விபவம் எனப்படும். 5 திவ்ய தேசங்களில், கோயில்களில் விக்ரஹமாக எழுந்தருளியிருத்தல் அர்ச்சை எனப்படுகிறது.

மிக்க தாகமுடையவனுக்குப் பூமிக்குள் தண்ணீர் இருந்தும் பயனில்லாததுபோல, எம்பெருமானுடைய பல நிலேகளில் அந்தர்யாமித்வமாகிற, மறைந்து ஸூக்ஷ்மமாக இருக்கிற நிலே, நமக்குப் பயனற்றதே. கண்டு வணங்க வேண்டும் என்று விரும் புவர்க்கு 'கட்கிலீ' என்னுப்படி கண்ணுல் காண முடியாமல் அஷ்டாங்கயோக முயற்சிகளாலே (தவயோகளாலே) காணும் படி நிற்கும் அந்தர்யாமித்வம் மிக்க அரிதேயாம்.

அண்ட பேரண்டங்களுக்கும் புறம்பே, பல்கிப் பெருகிக் காணப்படும் ஆவரண ஜலம் போலேதான் இவ்வுலக மனி தர்க்கு, லீலாவிபூதிக்கு அப்பாற்பட்டிருக்கிற பரத்வமும் எளி தில் அடைய முடியாததே.

அண்டத்துக்கு உட்பட்டிருந்தும், சென்று அடைய முடியாத பாற்கடலும் பயனற்றதே. 'பாலாழி நீ கிடக்கும் பண்பை யாம் கேட்டேயும்'' என்கிறபடி கேள்விப்படுகிறோமே தவிர சென்று காண முடியாத வ்யூஹம் என்று சொல்லப்படும் அந்த நிலையும் தம்மளவில் பயனற்றதே.

என்றைக்கோ வெள்ளம் எடுத்துப் பாய்ந்த பேராறுகளும் பயனற்றவையே. வெள்ளக்காலத்தில் வேண்டுமானால் அப்போ திருந்தவர்களுக்கு அவ் வாறுகள் பயன்பட்டிருக்கும். அதுபோல 'மண்மீது உழல்வாய்' என்று இந் நில வுலகில் அவதாரங்களைச் செய்து அப் பரம்பொருள் உலாவியிருந்தாலும் அக் காலத்தவர்க்கு அந்த ராம கிருஷ்ணாதி அவதாரங்கள் பயன்பட்டிருக்குமேயொழிய இன்று அந்த விபவாவதாரங்களை நாம் கிட்டி அனுபவிக்க முடியாமையால் அவைகளும் நமக்கு அவ்வளவாகப் பயன் தர முடியாதவையே.

பின்பு பயன்படுவது எதுதான் என்னில் மிகுதாக முடையவனுக்கு அப்போதே விடாய்தீரப் பருகலாம்படி, தேங்கியிருக்கிற ஆற்று மடுக்களே பயன்படும். அது போலே அப்போதே கண்டு பற்ற வேண்டும் என்று ஆசைப்படும் முமுக்ஷுக்களுக்கு (மோக்ஷத்தை விரும்பும் சேதனர்க்கு) அந்தர்யாமித்வமும், பரத்வமும், வ்யூஹமும், ராம கிருஷ்ணாதி விபவாவதாரங்களும் பயன்படாதவையாய், திருக்கோயில்களிலும், திருமாளிகைகளிலும், திருக்குடில்களிலும் கண்ணாலே கண்டு வணங்கலாம்படி நிற்கிற 'பின்னானார் வணங்கும் சோதியான' அர்ச்சாவதாரமே பயன்படும். ஆதலால் ஸ்ரீ பார்த்தஸாரதி போன்று ஆங்காங்கு கோயில் கொண்டிருக்கும் அர்ச்சாவதார திருமேனிகளே நமக்குத் தஞ்சம் என்பது தேற்றம்.

பின்னை உலகாரியனின் ஸ்ரீவசன பூஷண ஸ்ரீஸூக்தியைக் காண்மின். ''பூதகஜலம் போலே அந்தர்யாமித்வம்; ஆவரண ஜலம் போலே பரத்வம்; பாற்கடல் போலே வ்யூஹம், பெருக்காறு போலே விபவங்கள் அதிலே தேங்கின மடுக்கள் போலே அர்ச்சாவதாரம்.''

○

# திருவரங்கம் பெரியகோயில்

வித்வான். ந்யாய சிரோமணி, சொல்வேந்தர் பிள்ளைலோகம்
ஸ்ரீ உ. வே. ஸ்தலசயனத் துறைவார் ஸ்வாமி

கோயிலுக்குச் செல்வோம் வாரீர்:— பகவான் அர்ச்சை உருவத்தில் எழுந்தருளி இருக்கும் ஸந்நிதிகளைக் கோயில்கள் என்று சொல்லுகிறோம். ஆழ்வார்களும் ஆண்டாளும் கோயில் என்ற சொல்லை 'ஸந்நிதி' என்ற பொருளில் பலமுறை பயன்படுத்தியுள்ளார்கள். ஆனால், கோயில் என்ற சொல் ஸ்ரீவைஷ்ணவ ஸம்பிரதாயத்தில் தனிச் சிறப்புபெற்று விளங்குகிறது. 'ஸ்ரீரங்கம், திருப்பதி, காஞ்சீபுரம் ஆகிய மூன்று திவ்ய தேசங்களையும் சேர்த்துக் 'கோயில் திருமலை பெருமாள் கோயில்' என்று பெரியோர்கள் குறிப்பிடுகிறார்கள். 'கோயில்' என்ற சொல் ஸ்ரீரங்கத்திற்கே சிறப்புப் பெயராக இருக்கிறது. ஆதலால், ஸ்ரீரங்கத்தைக் 'கோயில்' என்றும், மற்ற கோயில்களை 'ஸந்நிதிகள்' என்றும் நாம் குறிப்பிடலாம். ஸ்ரீரங்கத்திற்குச் செல்லவேண்டும் என்று பாரித்திருப்பவர்கள் பலர் உள்ளனர். கோயிலுக்குச் சென்றதாகவே நினைத்துக் கொண்டு இக்கட்டுரை வாயிலாகத் திருவரங்கனின் பெருமைகளை உணரலாம் வாரீர் !

ஏன் பள்ளி கொண்டீர் ஐயா ! :—வயது முதிர்ந்தால் படுத்திருக்கத்தோன்றும்; அயர்வு இருந்தாலும் படுக்கத் தோன்றும். அரங்கா ! நீ படுத்திருக்கக் காரணம் என்ன? பிராட்டியும் கூசிப் பிடிக்கும் உன் மலரடியால் உலகத்தை அளந்தாயே! அது களைப்போ ! குலக்குமரா ! காடுறையப் போ என்றவுடன் தந்தை சொல்காக்கக் கரடு முரடான காடுகளில் மெல்லடி நோவ நடந்து சென்றனையே ! அது அயர்வோ ! விடிவாறே எழுந்திருந்து ஆநிரைகளை ஓட்டிக் கொண்டுக் காடுகளில் அலைந்தாயே ! அத்துயர் தீர ஓய்வெடுத்துக் கொண்டிருக்கிறாயோ ! யார் அழைப்பார்; யாருக்கு என்ன நன்மை செய்யலாம் என்று யோக நித்திரையில் இருந்து கொண்டு சிந்திக்கின்றாயோ ! வைகுண்டத்தை விட்டுப் பாற்கடலுக்கு

வந்தாய்! திருப்தி இல்லை! பாற்கடலை விட்டுப் பூமியில் பல முறை அவதரித்தாய்! மனநிறைவு இல்லை. திருவரங்கத்திலும் வந்து படுத்திருக்கிறாய்! நம்மாழ்வார் பெரியாழ்வார் ராமாநுஜர், மணவாள மாமுனி போன்ற மஹாத்மாக்கள் எவரேனும் இருக்கின்றனரா? அவர்களின் உள்ளங்களில் இடம் கிடைக்குமா என்று ஆராய்ந்து கொண்டிருக்கிறாயோ! அண்டியவர்களை விடவொண்ணாத ஸௌந்தரியத்தைக் காட்டிக் கொண்டு சயனித்திருக்கிறாயே! உன் திருவுள்ளம் தான் என்ன? உன் மனந்தால் என் நினைந்திருக்கிறாய்! சொல். ஏன் பள்ளி கொண்டீர் ஐயா!

கங்கையிற் புனிதமாய காவிரி:—'க' என்ற எழுத்தில் தொடங்கும் கங்கை, காயத்ரி, கீதை என்னும் சொற்களுக்குத் தனிப் பெருமை உண்டு. மூன்றும் புனிதப் பொருள்கள். கங்கையில் நீராடினால் புண்ணியம் என்பர் பலர். கங்கை நீரைச் சிறிதளவு பருகினாலும் பாவம் தீரும் என்று சிலர் சொல்லுவர். புண்ணிய நதியாகிய கங்கையைப் பார்த்தாலே பாவம் தொலையும் என்பர் மற்றும் சிலர். 'கங்கை' என்று சொன்னாலே தீவினைகள் அகலும் என்பதைப் பெரியாழ்வார் 'கங்கை கங்கையென்ற வாசகத்தாலே கடுவினை களைந்திடு கிற்கும் கங்கை' என்று அருளிச் செய்கிறார். பகவானுடைய 'ஸ்ரீபாத தீர்த்தம்' என்பதால்தான் கங்கைக்கு இவ்வளவு ஏற்றம்! பால் உயர்ந்த பொருள்தான். தகுதியற்ற பாத்திரத்தோடு தொடர்பு ஏற்படும்போது பாலும் மதிப்பிழக்கிறது. உணவில் தலைமயிர் விழுந்திருந்தால் அவ்வுணவு உண்ணத் தகுதியற்றது. ஒருவர் தலையில் வைத்துக் கொண்ட மலர் மற்றவருக்குப் பயன்படுவதில்லை. மிகவும் புனிதமான கங்கைக்கும் உருத்திரனின் கேச ஸம்பந்தம் பெற்றதால் தூய்மை சிறிதளவு குறைந்து விட்டதாம். ஆனால் தென்னாட்டில் நீர்வளம் குறையாமல் பெருகி வரும் காவேரி கங்கையை விடப் புனிதமானது. காவேரிக்கு எப்போதும் அரங்கனின் திருவடி ஸம்பந்தம் இருக்கிறது. பகவான், அல்லது பாகவதர்களோடு நிலையான தொடர்பு கொண்டவர்களுக்கு உலகில்

எந்நாளும் பெருமை உண்டு. திருவரங்கனின் திருவடிகளின் தொடர்பு காவேரிக்கு என்றும் உள்ளதால் 'கங்கையிற் புனித மாய காவிரி' என்கிறார் தொண்டரடிப்பொடியாழ்வார்.

பதின்மர் பாடும் பெருமான் :—ஆழ்வார்கள் பதின்மர் பன்னிருவர் என்றும் கூறுவதுண்டு

'பொய்கையார் பூதத்தார் பேயார் புகழ்மழிசை
அய்யனருள் மாறன் சேரலர் கோன்—துய்யபட்ட
நாதன் அன்பர்தாள் துளிகற்பாணன் நன்கலியன்,
ஈதிவர் தோற்றத் தடைவாமிங்கு'

என்று ஸ்ரீமணவாள மாமுனிகள் ஆழ்வார்கள் பதின்மரையும் கூறி அவர்கள் அவதரித்த வரிசை முறையையும் கூறுகிறார். பிராட்டியின் அவதாரமே ஆண்டாள். அவளும் எம்பெரு மானைப் பாடி இருக்கிறாள். ஆனால், ஆண்டாள் பெண் இனம். மதுரகவிகள் நம்மாழ்வாரின் சீடர், அவரை மதுரகவி யாழ்வார் என்று சொல்லுவதுண்டு. அவர் நம்மாழ்வாரின் பெருமைகளையே பாடினார். பதின்மரோடு இவ்விருவரையும் சேர்த்து ஆழ்வார்கள் பன்னிருவர் என்று வழக்கும் உள்ளது. பொய்கையார் தொடங்கித் திருமங்கையாழ்வார் முடிய ஆழ்வார் பதின்மரும் திருவரங்கனின் பெருமைகளில் ஈடுபட்டு அவனைப் பாடியுள்ளார்கள். மற்ற எம்பெருமான்களை இருவர், மூவர், நால்வர், எண்மர், ஒன்பதின்மர் என்று சில ஆழ்வார் களே பாடியுள்ளார்கள். பதின்மரும் பாடும் பெருமை பெற்ற வர் திருவரங்கச் செல்வனார். அதனால் அவரைப் 'பதிமன்மர் பாடும் பெருமாள்' என்று ஆசாரியர்கள் பெருமையோடு அழைப்பார்கள்.

நடையழகு நம்பெருமாள் :—எம்பெருமானை 'சதுர்கதி:' என்று விஷ்ணு ஸஹஸ்ரநாமம் குறிப்பிடுகிறது.

பகவானின் நடைக்குக் காளை, யானை, புலி, சிங்கம் ஆகிய நான்கு மிருகங்களின் நடைகளை வால்மீகி முனிவரும், ஆழ்வார் களும் உவமையாகக் காட்டியுள்ளார்கள். காளையின் நடை செருக்கு நடை, யானையின் அசைவுநடை பெருந்தன்மையான

நடை, குறி பார்த்துப் பாய்ந்து வெற்றி கொள்ளும் நடை புலியின் நடை. காம்பீர்யம் நிறைந்த நடை சிங்க நடை. பகவான் ராமனாகவும் கிருஷ்ணனாகவும் அவதரித்த காலத்தில் நடந்து இத்தகைய நடையழகுகளைக் காட்டினான். அர்ச்சாவதாரத்தில் நம் பெருமாளிடத்திலேயே இந்த நடையழகுகளை ஸேவிக்கலாம் என்று ஆசாரியர்கள் கூறி விட்டார்கள். இன்றைக்கும் ஸ்ரீரங்கத்தில் நடையழகு மிகவும் விசேஷம். ஆதலால் நடையழகர் நம் பெருமாள்.

கரும்பும் சுரும்பும் :— தேனிருக்குமிடத்தில் சுரும்புகள் (வண்டுகள்) சூழ்ந்திருக்கும். இனிமை நிறைந்த இடத்தில் வண்டுகள் நிறைந்து ஒலிக்கும். ஆழ்வார்கள், சயனித்திருக்கும் எம் பெருமானைக் 'கரும்பு' என்பார்கள். ஒரு பொருள் இனிப்பாக இருந்தால் 'கரும்பு போல் இனிக்கிறது' என்பர். 'தேனும் பாலும் கன்னலும் அமுதுமாகி' என்கிறார் ஆழ்வார். கரும்பைக் கன்னல் என்றும் கூறுவதுண்டு. ஆசாரியர்களை 'அறுகால் சிறு வண்டாகப் பெரியோர்கள் கூறுவார்கள். ஆழ்வார்களும் ஆசாரியர்களும் திருவரங்கத்தில் நிலையாக இருந்து கொண்டு, பல்லாண்டும் பரமாத்மனைச் சூழ்ந்திருந்து ஏத்தினர்: கரும்பில் உள்ள இனிய சுவை வண்டுகளை ஈர்க்கும். எம் பெருமானின் கல்யாண குணங்கள் ஆழ்வார்களையும் ஆசாரியர்களையும் ஈர்த்தன. அரங்கமா கோயில் கொண்ட கரும்பு திருவரங்கன். சுரும்பர் ஆசாரியர்.

வாரி வழங்கிய வள்ளல் :— கொடுக்கத் தக்க பொருளையே வள்ளல் கொடுப்பான். வேண்டக் கொடுப்பவனும் வள்ளல்; வேண்டிக் கொடுப்பவனும் வள்ளல். அரங்கன் மாவள்ளல்; தன்னையே கேட்டாலும் தன்னைத் தானே கொடுப்பவன். தனக்கே உரியதும், கொடுக்க முடியாததுமான பொருளை வள்ளல் கொடுப்பானோ! அரங்கன், கொடுத்தான். இவ்வுலகும் மற்ற உலகங்களும் பகவானுடையவை. அவற்றைப் பெற்றிருக்கும் தகுதி உடையவனும் அவன் ஒருவனே. அதனால் பகவானை 'உபய விபூதி நாயகன்' என்பர்.

ஸ்ரீ வைஷ்ணவ ஸாம் ராஜ்யத்தின் தலைமைப் பொறுப்பை ஏற்கும் நிலை ஸ்ரீ ராமாநுஜருக்குக் கிடைத்தது. திருவரங்கப் பெருமாளரையர் காஞ்சிபுரத்திலிருந்து ஸ்ரீ ராமாநுஜரைத் திருவரங்கத்திற்கு அழைத்துச் சென்றார். அது திருவரங்கனின் நியமனம்! சிறந்த மரியாதைகளோடு ஸ்ரீராமாநுஜர் வரவேற்கப் பட்டார். அரங்கன் ஸ்ரீராமாநுஜருக்கு உபய விபூதிகளையும் காக்கும் பொறுப்பைக் கொடுத்து மகிழ்ந்தான்; அருகிலிருந்து கொண்டு கைங்கர்யம் (தொண்டு) செய்யுமாறு பணித்தான். அந்நாளிலிருந்து ஸ்ரீ ராமாநுஜர் 'உடையவர்' (உபய விபூதியையும் உடையவர்) என்று போற்றப் படுகிறார். தனக்கே உரிய நித்ய விபூதி, லீலா விபூதிகளை ஸ்ரீ ராமாநுஜருக்குக் கொடுத்த மாவள்ளல் திருவரங்கச் செல்வனார்.

அரங்கனும் ஆலிநாடனும் :—'பராங்குச பரகால யதிவராதிகள்' என்ற வார்த்தை ஸ்ரீவைஷ்ணவர்களிடையே அடிக்கடி சொல்லப்படுகிறது. நம்மாழ்வார், திருமங்கையாழ்வார், இராமாநுசன் ஆகிய மூவரையும் குறிப்பிட்டாலே ஸ்ரீவைஷ்ணவ மஹாசாரியர்களைக் குறிப்பிட்டதாகும். யதிவராதிகள் என்பதால் நம் மணவாள மாமுனிகளும் கூறப்படுகிறார்.

நம்மாழ்வார் நம்பெருமாளைப் பற்றி திருவாய் மொழியை அருளிச் செய்தார். திருமங்கையாழ்வார் அத்தமிழ்மறைக்கு ஆறு அங்கங்களாக திவ்யப் பிரபந்தங்களை அருளிச் செய்தார். திருவரங்கனுக்கு ஸன்னிதி மண்டபம் ப்ராகாரங்களை நிறுவினார். அத்யயன உத்ஸவத்தை ஏற்பாடு செய்தார். ராமாநுஜர் உபயவேதாந்தங்களையும் காப்பாற்றி வளர்த்துக் கொண்டு, திருவரங்கனின் கைங்கர்யங்களை வகுத்து என்றென்றும் நடைபெறுமாறு செய்தார். மணவாள மாமுனிகள் பகவத் விஷய காலக்ஷேபம் ஸாதித்து நம் பெருமாளைக் கேட்க வைத்தார். ஸ்ரீரங்கத்தை நினைக்கும் போது கலியன் செய்த கைங்கரியமும், குறையல் பிரானடிக்கீழ் விள்ளாத அன்பனாகிய ராமாநுஜரின் திவ்யாக்ஞையும் ராமாநுஜருடைய மறு அவதாரமாயவதரித்து அரங்கனுக்கும் ஆசார்யனான மணவாள மாமுனிகளும் நினைவுக்கு வருவது இயற்கை தானே! ★

ஸ்ரீ

# திருமங்கை ஆழ்வார்

சென்ற ஐப்பசி மாதமானது ஆசார்யர்களில் கடைக்குட்டியான மணவாள மாமுனிகள் அவதரித்த மாதமென்றால் இம்மாதமான கார்த்திகையானது ஆழ்வார்களில் கடைக்குட்டியான திருமங்கை ஆழ்வார் அவதரித்த மாதமாகும்.

சோழமண்டலத்தில் திருமங்கை என்றொரு நாடு. அதில் திருக்குறையலூர் என்றொரு சிற்றூர். அவ்வூரில் கள்ளர் குடியில் பிறந்தவொருவன் சோழவரசனுக்கு சேனாதிபதியாக இருந்தான். அவனுடைய புத்திரராய் ஒரு கார்த்திகைமாதம் கார்த்திகை நட்சத்திரத்தில் அவதரித்தவர்தான் இவ்வாழ்வார். இவ்வாழ்வாரின் நிறம் நீலமாயிருந்தது பற்றி இவருக்கு நீலன் என்றே பெயரிட்டனர் இவரது பெற்றோர்.

இவர் தம்து குடிக்கு ஏற்ப போர் புரிவதில் மிகவும் வல்லவராயிருந்தபடியால், தந்தையை அடுத்து இவரே சேனாதிபதியானார். பரகாலன் (எதிரிகளுக்கு எமன்) என்ற பட்டமும் பெற்றார். இவருடைய வீரத்தை மெச்சி சோழவரசன் திருமங்கை நாட்டிற்கு இவரை குறுநில மன்னனாக ஆக்கினான். அவரும் சோழவரசனுக்குக் கப்பம் செலுத்தும் சிற்றரசனாக திருமங்கை நாட்டை ஆண்டுவந்தார்.

அந்நாட்டில் அண்ணன்கோயில் எனப்படும் திருவெள்ளக்குளம் ஒரு சிற்றூர். அவ்வூரில் ஒரு தாமரைப் பொய்கை. அப்பொய்கையில் நீராட வந்தனர் சில தேவலோகத்து நங்கையர். அவர்களுள் திருமாமகள் என்பவள் தன் தோழிகளை விட்டுப்பிரிந்து பூமியிலேயே தங்கிவிட்டனள். அவளை ஒரு ஸ்ரீவைஷ்ணவ வைத்யன் குமுதவல்லி என்று பெயரிட்டு வளர்த்துவந்தான்.

ஒருநாள் வேட்டையாட வந்த திருமங்கை மன்னன் இவளழகைக்கண்டு மணம் புரிந்துகொள்ள விரும்பிக் கேட்க

அவள் "ஓராண்டு அனுதினமும் ஆயிரத்தெட்டு ஸ்ரீவைஷ்ண வர்களுக்கு உணவளித்து அவர்களுடைய பிரசாதத்தை நீர் உட்கொண்டால் உம்மை மணம் செய்துகொள்ளுகிறேன்" என்றாள். திருமங்கை மன்னனும் இசைந்தார்; திருமணமும் நடந்தது.

வாக்குறுதியை நிறைவேற்ற அரசாங்கத்தின் கஜானாவி லிருந்து பொன்னும் பொருளும் செலவிட்டார்; ஸ்ரீவைஷ்ண வர்கள் மனம் குளிர்ந்தனர். பேரரசனுக்குக் கப்பம் கட்ட மறந்தார். அவன் சீற்றமடைந்தான். சிறைப் பிடித்தான். திருமங்கை மன்னன் திறை செலுத்தப் பொருளில்லாமல் தவித்தார். அப்போது காஞ்சி தேவப்பெருமாள் இவர் கன வில் தோன்றி காஞ்சியில் வேகவதியாற்றங்கரையில் புதையல் இருப்பதாகக் காட்ட அங்கே புதையல் கண்டெடுத்தார்; கப்பமும் செலுத்தினார்.

ஆனால் வெகு சீக்கிரத்திலேயே வைஷ்ணவ ததியாரா தனத்திற்கான கைப்பொருள்கள் முழுதும் தீர்ந்துவிட்டன. இனி வழிப்பறி செய்தாகிலும் பொருள் சம்பாதித்து அக்கைங் கர்யத்தை நடத்துவதென்று தீர்மானித்து செயலிலும் இறங் கினார். ஆங்காங்கு சென்று வழிச்செல்வோரை மிரட்டிப் பணம் பறித்தார். இவ்வாறு இவர் களவு செய்வதும் அடியார் களைப் பூசிக்கவேயாதலால் இவர்மீது தன்னுடைய அருளைப் பொழியவேண்டும் என்று திருவுள்ளம் கொண்டான் எம் பெருமான்.

தானும் தன்னுடைய பிராட்டியுமாகத் திருமணக் கோலம் பூண்டு நிறைய ஆபரணங்களை அணிந்துகொண்டு திருமங்கை மன்னன் இரியுமிடத்திற்கு வந்தான். திருமணத் தம்பதிகளை வழிமறித்து, மிரட்டி, ஆபரணங்களைக் கழற்றச் செய்தார். எம்பெருமானுடைய திருவடி விரல்களில் அணிந் திருந்த ஒரு தங்க ஆபரணத்தைக் கழற்ற முடியவில்லை. விடு வாரா? தம்பற்களால் கடித்திழுத்துக் கழற்றிவிட்டார் திருமங்கையார். பிறகு எல்லாவற்றையும் சேர்த்து ஒரு

மூட்டையாகக் கட்டினார்; தூக்க முயன்றார், முயன்றார், முடியவேயில்லை. சினம் கொண்டு திருமங்கையார் "இந்த மூட்டையை என்னால் தூக்க முடியாதபடி என்ன மந்திரம் போட்டுவிட்டீர்" என்று மணமகனை மிரட்டினார். உடனே அம்மணவாளன் திருமங்கயாரின் காதில் நாராயண மந்திரத்தை உபதேசித்து விட்டார்.

அக்கணமே அவருக்கு அஞ்ஞானவிருள் நீங்கி, மெய்ஞ் ஞானச் சுடரெழுந்து எம்பெருமானைப் பரிபூரணமாக அனுபவிக்கத் தலைப்பட்டார். அந்த ஆநந்தத்தின் போக்குவிடாக பிரபந்தங்கள் வெளிப்பட்டன அவ்வாறு தொடங்கியதுதான் "வாடினேன், வாடி வருந்தினேன்" என்று தொடங்கும் பெரிய திருமொழி. அப்பெரிய திருமொழி 1084 பாக்கள் கொண்டது. மேலும் திருக்குறுந்தாண்டகம், திருவெழுகூற் றிருக்கை, சிறியதிருமடல், பெரியதிருமடல், திருநெடுந்தாண்டகம் ஆகிய ஆறு பிரபந்தங்கள் அருளிச் செய்தார். இவர் ஒவ்வொரு திவ்யதேசமாக எழுந்தருளி அவ்வவ திவ்ய தேசங்களை மங்களாசாஸனம் செய்துகொண்டே யாத்திரை செய்தார். இவர் மங்களாசாஸனம் செய்தருளிய திவ்யதேசங்கள் 84 ஆகும். அவ்வாறு மங்களாசாஸனம் செய்து வருகையில் சீர்காழியில் ஞானசம்பந்தரை வென்று அவருடைய வேலாயுதத்தைப் பெற்று வேற்கலியனானார்.

கடைசியில் ஸ்ரீரங்கம் அடைந்து அக்கோயிலுக்குத் திருப்பணி செய்யவேண்டும் என்று திருவுள்ளம் கொண்டார். அதற்காக நாகப்பட்டணத்திலிருந்த ஒரு புத்த விஹாரத்திலிருந்து தங்கத்தாலான மிகப் பெரியதொரு புத்த விக்ரஹத்தைக் களவாடி அதை உருக்கி ஸ்ரீரங்கநாதனுடைய விமானத்தைப் பொன்னால் வேய்ந்தார்.

இவ்வாறு பல திவ்ய தேசங்களையும் மங்களாசாஸனம் செய்தருளி, இவ்வுலகில் நெடுங்காலம் வாழ்ந்திருந்து முடிவில் வீடுபெற்றார்.

இவ்வாழ்வாருடைய காலம் கி. பி. 10 ம் நூற்றாண்டுக்கு மேல் என்பது சரித்திர ஆசிரியர்கள் கருத்து.

★

(16-ம் பக்கத் தொடர்ச்சி)

போராட வேண்டிய அவசியம் கிடையாது. அது தானாக வளரும். அதை வளர்க்கப் பல தமிழறிஞர்கள் இருக்கிறார்கள் அதற்காக யாரும் தீக்குளிக்கத் தேவையில்லை கீதாசார்யன் ஆசிரியர் உள்ளது உள்ளபடியே தூய மனத்துடன் தெய்வீக சிந்தனையுடன் எதையும், எழுதவேண்டும். யாருக்காகவும், எதற்காகவும், பயப்படக்கூடாது. அவர்கள் முயற்சியை நான் பாராட்டுகிறேன்''

அடுத்து பேசியவர்

## திரு. சாண்டில்யன்

திரு வெங்கடகிருஷ்ணன் பத்திரிகை ஒன்றை ஆரம்பிக்கப் போகிறேன் என்று கூறிய போது நான் வேண்டாம் என்று சொன்னேன். ஏனென்றால் பத்திரிகைத் தொழில் அவ்வளவு கடினமானது. இருப்பினும் துணிந்து ஆரம்பித்த ஆசிரியரை நான் பாராட்டுகிறேன். ஒரு உண்மையை உங்களுக்குச் சொல்லுகிறேன். வைணவம் தமிழை வளர்த்தது போன்று வேறு எந்த சமயமும் வளர்த்தது கிடையாது இதை நான் மிக தைரியமாக எந்தக் கூட்டத்திலும் பேசுவேன். அதை மனதில் வைத்துக் கொண்டு இப்பத்திரிகை மேலும் மேலும் தமிழை வளர்க்கப் பாடுபட வேண்டும். இளைஞர்களுக்குள்ள ஆர்வத்தை நான் மிகவும் பாராட்டுகிறேன்.

பிறகு தலைமை உரையில் உ. வே. P. B. அண்ணங்கராச்சார்யார் ஸ்வாமிகள். தன்னுடைய நீண்ட உரையில் ஆசிரியர் வெங்கடகிருஷ்ணனின் முயற்சியைப் பாராட்டி "கீதாசார்யன்" பத்திரிகையையும் ஊக்குவித்தார். கீதையின் தத்துவங்களையும் விவரித்தார். (அவை தனித்தொடர் கட்டுரையாக வருகின்றன.)

முடிவில் கீதாசார்யனின் நிதிக்காப்பாளர் திரு P. T. சுந்தரவரதன் (ஆழ்வான்) அவர்கள் நன்றி தெரிவிக்க, விழா இனிதே முடிந்தது.

# கருத்து ஒற்றுமைகள்

"தீபம்" நா. பார்த்தசாரதி.

கீதை, உப நிஷதங்கள், வேதங்கள், ஆகியவற்றிலும் திருக்குறள், பைபிள், ஜைனர்கள் இயற்றிய அற நூல்கள் ஆகியவற்றிலும் ஒத்த கருத்துக்கள் சில வருகின்றன. வெறும் கருத்துக்கள் மட்டுமில்லை, உவமைகள், சொல்லும் முறை ஆகியவற்றில் கூட அவற்றினிடையே ஒற்றுமை காணப்படுகிறது. இந்த ஒற்றுமையால் அந்த நற் கருத்துக்கள் மக்களிடையேயும், அறிஞர்களிடையேயும் பரவுவதற்குப் பதில் வீண் சர்ச்சைகளும், பூசல்களுமே பரவுவது வருந்தத் தக்கது ஆகும்.

எது முதலில்? :—அந்தக் கருத்தை எந்த நூல் முதலில் கூறியது, எந்த நூல் இரண்டாவதாகக் கூறியது? யாருடைய காலம் முந்தியது? யாருடைய காலம் பிந்தியது? என்பன போன்ற சச்சரவுகளில் நேரம் கழிகிறதே ஒழிய அக் கருத்துக்களை வாழ்வில் கடைப் பிடிப்பதிலும், ஒழுகி உய்வதிலும் கழிவதில்லை. கீதை, குறள் போன்ற நூல்களில் இப்படிச் சில ஒத்த கருத்துக்கள் உண்டு.

யார் சொன்னால் என்ன? :—அறிவாளிகளுக்குள் சண்டை மூட்டி விட்டுக் களிப்பதில் பாமரர்களுக்கு எப்போதுமே ஈடுபாடு உண்டு. இங்கேயும் சில பாமரர்கள் தாம் இப்படிச் சண்டைகளை மூட்டி விட்டுக் களித்துக் கொண்டிருக்கிறார்கள். இதன் பயனாக நூல்களும், உயர் கருத்துக்களும் பரவுவதை விடச் சர்ச்சைகளே பரவிக் கொண்டிருக்கின்றன. ஒரு கூடை நிறைய ஆரஞ்சுப் பழங்கள் பழக் கடையில் விற்கின்றன. வாங்கி ருசித்துச் சாப்பிடப் போகிறவனுக்கு அவை எந்த மரத்தில் பழுத்தவை, எந்த நாளில் பழுத்தவை எப்போது பறித்தவை என்பனவா முக்கியம்? பழம் நன்றாயிருக்கிறதா இல்லையா, பயன்படுமா, பயன்படாதா என்பதுதான் அவனுக்குத் தெரிய வேண்டியவை. அறநூல் கருத்துக்களைப் பொறுத்தவரை இரசிகன் அல்லது படித்தறிந்து கடைப் பிடிப்பவன்

என்பவன் பழம் வாங்கக் கடைக்குப் போகிறவனின் நிலையில் தான் இருக்க வேண்டும். ஒவ்வொருவனும் ஒவ்வொன்றிலும் ஆராய்ச்சியாளனாகி நின்று விட்டால் அப்புறம் யாரும் எதையும் கற்கவோ, இரசிக்கவோ முடியாமல் போய்விடும். அற நூல்களைப் பொறுத்தவரை அளவு மீறிய ஆராய்ச்சி மனப்பான்மை கூடாது.

சில உதாரணங்கள் :—இதற்குச் சில உதாரணங்களைப் பார்க்கலாம். இரண்டு மூன்று திருக்குறட் கருத்துக்களும், கீதை முதலிய வேறு சில நூல்களில் கூறப்பட்டுள்ள கருத்துக்களும் ஒத்து வருகின்றன என்றால் அதை நாம் எவ்வாறு நோக்க வேண்டும்? "ஒரு நல்ல கருத்தையே பல நல்ல ஆசிரியர்கள் வற்புறுத்தி யிருப்பதால் அந்தக் கருத்து மிக மிக முக்கியமானது என்று புரிந்து கொள்ள வேண்டுமே ஒழிய யார் முதலில் சொன்னார், யார் பின்னால் சொன்னார் என்ற ஆராய்ச்சி அவசியமற்றது.

'குடம்பை தனித் தொழியப் புட்பறந் தற்றே
உடம்போ டுயிரிடை நட்பு.''

(திருக்குறள்)

''உறங்குவது போலும் சாக்காடு உறங்கி
விழிப்பது போலும் பிறப்பு''

(திருக்குறள்)

என்ற இரண்டு குறள்களில் வரும் கருத்தையும், கருத்தை விளக்கும் உவமைகளையும் இப்படிப் பட்டவை என்று வைத்துக் கொண்டால் மேலே எனது இக்கருத்தைச் சுலபமாக விளக்கி விடலாம்.

பயனே முக்கியம் !—நூலாராய்ச்சியை விட நூற்பயனே முக்கியம் என்ற மனப்பான்மை நமக்கு வேண்டும். நூற் பயனைப் பற்றி எண்ணியும் பார்க்காமல் நூலாராய்ச்சிச் சச்சரவுகளிலேயே நினைத்துக் கொண்டிருப்பது புத்தகத்தைப் பிரித்துப் படிக்க நினையாமலே புத்தக அட்டையைப் பற்றியே நாட்கணக்காக யோசித்துக் கொண்டு உட்கார்ந்திருப்பதைப்

போன்றது. உடம்புக்கும் உயிருக்கும் உள்ள தொடர்பு தொடர்பின்மைகள் பற்றித் திருவள்ளுவர் கூறிய கருத்தும் சரீரம்—ஆன்மா—பற்றித் தொசாரியன் கூறிய கருத்தும் ஒரே விதமாக இருந்தால் படிப்பவனிடம் அந்தக் கருத்தின் மேல் நம்பிக்கை அதிகமாக வேண்டுமே ஒழியக் குழப்பம் அதிகமாக வேண்டிய அவசியமில்லை. பிறப்பு—இறப்புப் பற்றிய கருத்தும் அப்படியே.

**ஆராய்ச்சி வேண்டாம் :—**குழப்பமும், தெளிவின்மையும் ஆராய்ச்சியாளனின் தனிச் சொத்துக்கள். பாவம் செய்த ஆராய்ச்சியாளர்கள் அவற்றை அநுபவிக்கட்டும்; நாம் நூற் பயனை அடைந்து வாழ்வில் முன்னேறுவோம். நூற் பயனை அடைய முடியாமல், அடையும் நோக்கமும் இல்லாமல், வாழ் நாளை வீணே கழிக்கும் ஆராய்ச்சியாளர்கள்மேல் நாம் அநுதாபப் படுவதைத் தவிர வேறு ஒன்றும் செய்வதற்கில்லை. அந்த அநுதாபமும் கருணையும் கூட அற நூல்களில் இருந்து நாம் அடைந்த நூற்பயன் காரணமாகவே நம்மிடம் உள்ளன. நூலாராய்ச்சியால் அவை நமக்குக் கிடைக்கவில்லை.

*WITH BEST COMPLIMENTS FORM*

# S. T. V. VADIVEL & CO.,

IRON & STEEL MERCHANTS

25, SEMBUDOSS STREET,
MADRAS-600 001.

Phone : 23552

தமது முதிர்ந்த வயதிலும் எங்கள் அழைப்பை ஏற்று சற்றும் சிரமம் பாராமல் காஞ்சியிலிருந்து திருவல்லிக்கேணிக்கு வந்து வெளியீட்டு விழாவிற்குத் தலைமை தாங்கி எங்களைப் பெருமைக்குள்ளாக்கிய ஸ்ரீமான் உ. வே. பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசாரியர் ஸ்வாமிக்கும்,

இளைஞர்களாகிய யாங்கள் அழைத்தவுடன் மகிழ்ச்சியுடன் அவ்வழைப்பை ஏற்று, முதல் இதழை வெளியிட்டுப் பாராட்டிப்பேசிய தலைமை நீதிபதி உயர்திரு T. ராமப்ரஸாத் ராவ் அவர்களுக்கும்,

தமது ஓய்வில்லாத நிகழ்ச்சிகளுக்கிடையே எமது நிகழ்ச்சிக்கு வந்து முதல் பிரதியினைப் பெற்றுக் கொண்ட தோடல்லாமல் தமது அறநிலையத் துறையின் ஆதரவையும் எமக்கு வழங்கிய அறநிலைய ஆணையாளர் திரு U சுப்பிரமணியன் I A. S அவர்களுக்கும்,

எங்களுடன் எளிமையாகக் கலந்து பழகுவதைப் போலவே விழாவிலும் கலந்து கொண்டு, பத்திரிகை நடத்துவதிலுள்ள சிரமங்களை எடுத்துக்காட்டி, அறிவுரைகள் பல வழங்கி ஊக்குவிக்கும் எழுத்துலக ஜாம்பவான் திரு சாண்டில்யன் அவர்களுக்கும்,

எங்களது அழைப்பிற்கு இணங்கி விழாவில் கலந்து கொண்டு, சிறப்புரையை தனக்கே உரித்தான கனல் தெறிக்கும் பாணியில் வழங்கி, ஒரு பத்திரிகையின் நடை எப்படி இருக்க வேண்டும் என்று எடுத்து கூறியதோடல்லாமல் மேலும் பல அறிவுரைகளை வழங்கிய தீபம் ஆசிரியர் திரு நா. பார்த்தசாரதி அவர்களுக்கும்,

விழாவிற்குப் பெருந்திரளாக வருகை தந்து எங்களை மகிழ்ச்சியிலாழ்த்திய பெருமக்களனைவருக்கும்,

இங்கு பெயர் இடம் பெறாவிட்டாலும், தங்களது ஒத்துழைப்பாலும் ஆதரவாலும் எங்களுடைய இதயத்தில் நிலையாக இடம் பெற்றுவிட்ட அனைவருக்கும்,

**எமது உளம் கனிந்த நன்றி.**

# ஆஸ்திகரே!

முதல் இதழ் வெளிவந்ததிலிருந்து உங்கள் அன்பும் ஆதரவும் எங்களை திக்குமுக்காட வைக்கின்றன. பாராட்டுக் கடிதங்கள் வந்தவண்ணமிருக்கின்றன. உங்கள் ஆதரவுக்கும் பாராட்டுரைகளுக்கும் எங்களுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

ஆனால் எங்களுக்கு இதில் ஒரே ஒரு குறை. குறைகளைச் சுட்டிக்காட்டி ஒரு கடிதம் கூட வரவில்லை. நிறைகளைப் பாராட்டியே கடிதங்கள் வருகின்றன. இளைஞர்களின் உற்சாகத்திற்கு எடுத்த எடுப்பிலேயே அணை போட வேண்டாம் என்றிருக்கிறீர்கள் போலும்.

கட்டுரைகள் அனுப்பிக் கொண்டிருக்கும் அன்பர்களுக்கும் எங்கள் நன்றி. தகுந்த சமயத்தில் அவர்களது கட்டுரைகள், கவிதைகள் முதலியன ப்ரகரிக்கப்படும். புதிய பகுதிகள் ஆரம்பிப்பது பற்றி வாசகர்கள் யோசனையைக் கேட்டிருந்தோம். தகுந்த யோசனைகளைக் கூறினால் ஏற்கச் சித்தமாயிருக்கிறோம். யோசனைகளனைத்தையும் கடிதம் மூலமாகவே தெரிவிக்கும்படி கேட்டுக் கொள்கிறோம்.

இதுவரை சந்தாதார்களாகச் சேர்ந்துள்ள ஒவ்வொருவரும் தங்களுக்குத் தெரிந்தவர்களிடம் சொல்லி அவர்களையும் சந்தாதார்களாகச் சேர்த்து பத்ரிகையின் வளர்ச்சிக்கு உதவும்படி கேட்டுக் கொள்கிறோம். இது பற்றி ஓர் புதிய அறிவிப்பை அடுத்த இதழில் அறிவிக்கிறோம். அதுவரை உங்களிடமிருந்து விடை பெறுகிறோம்.

---

Edited and Published by M. A. Venkata Krishnan and Printed at Guru Achagam, 19, Irusappa Gramani Street, Triplicane, Madras-600 005.



அமர்ந்திருப்பவர்கள் : நீதிபதி, ஸ்வாமி, தீபம் நா. பார்த்தசாரதி.
பேசுபவர் : சாண்டியல்யன்.
அருகில் நிற்பவர்கள், நிதிக்காப்பாளரும், ஆசிரியரும்.

Registered No.: T. N. M. S. (C) 345




தலைமை நீதிபதி வெளியிட ஆணையாளர்
பெற்றுக்கொள்கிறார், இடையில் ஆசிரியர்.

wrapper printed at enenjey printers, madras-600 005